www.kanimaths.com

## கல்வியில் சீரமைப்பையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கான இலக்குகளை அடைய உதவுதல்

# THIRAN

(Targeted Help for Improving Remediation & Academic Nurturing)

# தமிழ்

## ஆசிரியர் கையேடு

## வகுப்புகள்: 6, 7 & 8

33080500808
www.kanimaths.com

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்
பள்ளிக் கல்வித்துறை
தமிழ்நாடு அரசு

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

**தமிழ்நாடு அரசு**

**முதல் பதிப்பு – 2025**

## பாடப்பொருள் உருவாக்கம்

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்**

© SCERT 2025

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

## நூல் அச்சாக்கம்

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

3308050080 8
www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 2 7/11/2025 4:54:19 PM

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

## உள்ளே செல்லும் முன்...

வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகில் அறிவோடு சிந்தனையும் பெற்ற தலைமுறையாக மாணவர்களை உருவாக்கும் நிலையில் இயங்கி வருகிறோம். கல்வி அறிவைப்பெற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் இன்றியமையாதவை. மொழித்திறன்களில் வலுவான அடித்தளம் அமையப் பெற்ற மாணவர்களால் எத்தகு பாடப்பொருளையும் இலகுவாகப் பயில முடியும். அதற்கான முயற்சிகளுள் ஒன்றே இந்த ஆசிரியர் கையேடு.

6, 7, 8 வகுப்புகளில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு கற்றல் நிலையில் இருக்கக்கூடும். ஒரே வகுப்பிற்குள்ளேயே மெல்லக் கற்கும் மாணவரும், விரைவாகக் கற்கும் மாணவரும் சராசரியாகக் கற்கும் மாணவரும் இருக்கலாம். இவர்கள் தங்கள் கற்றல் நிலையிலிருந்தே அடிப்படை மொழித்திறன்களில் வலுப்பெறவும் அடுத்தடுத்த வகுப்புநிலைத் திறன்களில் வளம்பெறவும் மொழிப்பாடத்தை எவ்வாறு கற்பிக்கலாம் என்ற வழிகாட்டுதல் இக்கையேட்டில் அளிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மொழித்திறன்கள், வகுப்புநிலைத் திறன்கள் சார்ந்த பாடப்பொருளைச் செயல்பாடுகளின் வாயிலாக வகுப்பறையில் எவ்வாறு கற்பிக்கலாம் என்பதற்கான வழிகாட்டலாக ஆசிரியர் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

செயல்பாடுகள்வழிப் பாடப்பகுதிகளை உணர்ந்துகொண்ட மாணவர்கள் செய்து பழக மாணவர் பயிற்சிநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அடிப்படை மொழித்திறன்கள் 6, 7, 8 வகுப்பு மாணவர்களுக்கு ஒரே பாடப்பொருளாக 15 தலைப்புகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அலகும் பின்வரும் வரிசை முறையில் அமைந்துள்ளன.

- கற்றல் விளைவு
- எழுத்துகளை நினைவுகூர்தல்
- சொல்லக்கேட்டு எழுதுதல்
- சொற்கள், தொடர்களைப் படித்தல்
- பயிற்சி நூல் செயல்பாடு
- விரைந்து முடித்த மாணவர்களுக்கு....

வகுப்புநிலைத் திறன் சார்ந்து அந்தந்த வகுப்பு நிலைக்கேற்ற பாடப்பொருளாக 10 தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அலகும்,

- கற்பித்தல் செயல்பாடு (ஆசிரியர் கையேடு)
- பயிற்சி நூல் செயல்பாடு

என்னும் வகையில் அமைந்துள்ளன.




Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 4 7/11/2025 4:54:20 PM

www.kanimaths.com

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்க எண் | கற்பித்தல் மாதம் | கற்பித்தல் நாள்கள் |
|---|---|---|---|
| அடிப்படை மொழித்திறன்கள் | 1 - 22 | ஜூலை, ஆகஸ்டு | 30 நாள் (90 நிமிடம்) |
| வகுப்புநிலைத் திறன்கள் | 23 - 48 | ஆகஸ்டு–ஜனவரி | 20 நாள் (40 நிமிடம்) (வாரத்திற்கு ஒரு பாடவேளை) |


**குறிப்பு:** மாணவர்கள், பயிற்சி நூலில் ஒவ்வோர் அலகின் பயிற்சிகளைச் செய்து முடித்தபின், நட்சத்திரக் குறியீட்டிற்கு வண்ணமிடச் செய்யுங்கள். ஒவ்வொரு பயிற்சியை முடித்தபிறகு, பயிற்சித்தாளில் நாளைக் குறிப்பிடுங்கள்.






Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 5 7/11/2025 4:54:21 PM

# அடிப்படை மொழித்திறன்கள்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | எழுத்தும் சொல்லும் – 1 (உயிர், மெய், உயிர்மெய் வரிசை – அ, ஆ) | 1 |
| 2 | எழுத்தும் சொல்லும் – 2 (உயிர்மெய் வரிசை – இ, ஈ) | 2 |
| 3 | எழுத்தும் சொல்லும் – 3 (உயிர்மெய் வரிசை – உ, ஊ) | 3 |
| 4 | சொல்லும் தொடரும் – 1 (உயிர்மெய் வரிசை – எ, ஏ) | 4 |
| 5 | சொல்லும் தொடரும் – 2 (உயிர்மெய் வரிசை – ஐ) | 5 |
| 6 | சொல்லும் தொடரும் – 3 (உயிர்மெய் வரிசை – ஒ, ஓ, ஔ) | 6 |
| | படிக்கப் பழகுதல் | 7 |
| 7 | சொல் உருவாக்குதல் | 14 |
| 8 | தொடர் உருவாக்குதல் | 14 |
| 9 | பாடல் | 15 |
| 10 | உரைப்பகுதி | 16 |
| 11 | வினா | 17 |
| 12 | உரையாடல் | 17 |
| 13 | கதை | 18 |
| 14 | நாள்குறிப்பு | 19 |
| 15 | கடிதம் | 20 |


3308050808
www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 6 7/11/2025 4:54:21 PM

www.kanimaths.com

## அடிப்படை மொழித்திறன்கள்

| வ. எண் | தலைப்பு | நாள் | பாடப்பொருள் | கற்றல் விளைவுகள் |
|---|---|---|---|---|
| 1 | எழுத்தும் சொல்லும் –1 (உயிர், மெய், உயிர்மெய்– அ, ஆ வரிசை) | 1, 2 | உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், அ, ஆ வரிசை உயிர்மெய் எழுத்துகள், சொற்கள் | 103. மொழியில் உள்ள ஒலிகள், சொற்களைக் கொண்டு விளையாடுதல். |
| 2 | எழுத்தும் சொல்லும் –2 (உயிர்மெய் – இ, ஈ வரிசை) | 3, 4 | இ, ஈ வரிசை உயிர்மெய் எழுத்துகள், சொற்கள் | 103. மொழியில் உள்ள ஒலிகள், சொற்களைக் கொண்டு விளையாடுதல். |
| 3 | எழுத்தும் சொல்லும் –3 (உயிர்மெய் – உ, ஊ வரிசை) | 5, 6 | உ, ஊ வரிசை உயிர்மெய் எழுத்துகள், சொற்கள் | 103. மொழியில் உள்ள ஒலிகள், சொற்களைக் கொண்டு விளையாடுதல். |
| 4 | சொல்லும் தொடரும் –1 (உயிர்மெய் – எ, ஏ வரிசை) | 7, 8 | எ, ஏ வரிசை உயிர்மெய் எழுத்துகள், சொற்கள், தொடர்கள் | 107. எழுத்துகள், சொற்கள், தொடர்களைக் கேட்டும் / படித்தும் புரிந்துகொண்டு பேசுதல், எழுதுதல். |
| 5 | சொல்லும் தொடரும் –2 (உயிர்மெய் – ஐ வரிசை) | 9, 10 | ஐ வரிசை உயிர்மெய் எழுத்துகள், சொற்கள், தொடர்கள் | 107. எழுத்துகள், சொற்கள், தொடர்களைக் கேட்டும் / படித்தும் புரிந்துகொண்டு பேசுதல், எழுதுதல். |
| 6 | சொல்லும் தொடரும் –3 (உயிர்மெய் – ஒ, ஓ, ஔ வரிசை) | 11, 12 | ஒ, ஓ, ஔ வரிசை உயிர்மெய் எழுத்துகள், சொற்கள், தொடர்கள் | 107. எழுத்துகள், சொற்கள், தொடர்களைக் கேட்டும் / படித்தும் புரிந்துகொண்டு பேசுதல், எழுதுதல். |
| 7 | சொல் உருவாக்குதல் | 13, 14 | மொழி விளையாட்டு – 1 | 103. மொழியில் உள்ள ஒலிகள், சொற்களைக் கொண்டு விளையாடுதல். |
| 8 | தொடர் உருவாக்குதல் | 15, 16 | மொழி விளையாட்டு–2 | 311. பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தொடர் எழுதுதல். |
| 9 | பாடல் | 17, 18 | பாடல், சார்ந்த மொழித்திறன்கள் – பாடல் வினாவிடை, பாடல் உருவாக்குதல் | 107. எழுத்துகள், சொற்கள், தொடர்களைக் கேட்டும் / படித்தும் புரிந்துகொண்டு பேசுதல், எழுதுதல்.<br>512. கற்பனையாகப் பாடல்கள் எழுதுதல் |
| 10 | உரைப்பகுதி | 19, 20 | உரைப்பகுதி, சார்ந்த மொழித்திறன்கள் – உரைப்பகுதி வினாவிடை, உரைப்பத்தி எழுதுதல் | 313. பத்தியைப் படித்துப் புரிந்து கொள்ளுதல், கருத்து தெரிவித்தல், சார்ந்த வினாக்களுக்கு விடையளித்தல். |
| 11 | வினா | 21, 22 | வினா, சார்ந்த மொழித்திறன்கள் – கேட்டும் படித்தும் வினா உருவாக்குதல் | 102. கேட்ட மற்றும் படித்தவற்றிலிருந்து வினா எழுப்புதல், கருத்துகளைக் கூறுதல். |
| 12 | உரையாடல் | 23, 24 | உரையாடல், சார்ந்த மொழித் திறன்கள் – உரையாடல் வினாவிடை, உரையாடல் எழுதுதல் | 204, 305. அனுபவத்தின் மூலம் உணர்ந்தவற்றைப் படித்தவற்றுடன் (பேச்சு வடிவிலோ, எழுத்து வடிவிலோ) தொடர்பு படுத்துதல். |
| 13 | கதை | 25, 26 | கதை, சார்ந்த மொழித்திறன்கள் – கதை குறித்துப் பேசுதல், எழுதுதல், கதை எழுதுதல் | 206, 414. சொந்தக் கற்பனையின் அடிப்படையில் கதைகளைக் கூறுதல், நீட்டித்தல். |
| 14 | நாள்குறிப்பு | 27, 28 | நாள்குறிப்பு, சார்ந்த மொழித்திறன்கள் – நாள்குறிப்பு வினாவிடை, நாள்குறிப்பு எழுதுதல் | 410. பல்வேறு சூழல்கள் / நோக்கங்களுக்கு ஏற்ப (நாள்குறிப்பு) எழுதுதல். |
| 15 | கடிதம் | 29, 30 | கடிதம், சார்ந்த மொழித்திறன்கள் – கடிதம் சார்ந்து பேசுதல், கற்பனையாகக் கடிதம் எழுதுதல் | 512. கற்பனையாகக் கடிதங்கள் எழுதுதல். |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 7 7/11/2025 4:54:21 PM

# அடிப்படை மொழித்திறன்கள்

## பயிற்சிநூலின் நோக்கங்கள்

- மாணவர்கள், எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதிசெய்தல்.
- சொற்கள், தொடர்களைப் படிப்பதற்கான பயிற்சியாக அமைதல். (படித்துக்காட்டுக)

## பயிற்சிநூல் பயிற்சிகளை மேற்கொள்ளும் முறை

- மாணவர்கள் இருவராக இணைந்து / சிறுகுழுவாகச் சேர்ந்து ஒருவருக்கொருவர் படித்துக்காண்பித்தல் வேண்டும்.
- படிப்பதற்குத் தடுமாறும் மாணவர்களுக்கு ஆசிரியரோ / மீத்திறன் மாணவரோ வழிகாட்ட வேண்டும்.
- மாணவர் ஒருவர் தொட்டுக்காட்ட, அடுத்த மாணவர் உடனுக்குடன் சரியாகப் படிக்க வேண்டும்.
- அனைத்து எழுத்துகள், சொற்களை ஒரே மூச்சில் விரைவாகப் படிக்க வேண்டும்.

மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்பப் **படித்துக்காட்டுக** பகுதியில் இடம்பெறும் எழுத்துகள், சொற்கள், தொடர்களை நாள்தோறும் சொல்லக்கேட்டு எழுதச் செய்க.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 8 7/11/2025 4:54:22 PM

# 1 எழுத்தும் சொல்லும் – 1


(உயிர், மெய், உயிர்மெய் வரிசை – அ, ஆ)

நாள்: 1, 2

## கற்றல் விளைவுகள் (அலகு 1–6)

- ❖ எழுத்துகளை நினைவுகூர்ந்து சொற்கள், தொடர்களைப் படிப்பர், எழுதுவர்.
- ❖ சொற்களஞ்சியம் பெறுவர்.

### கோடுகள் குறுக்கிடாமல் இணைத்துக் காட்டுதல்



- படத்தைக் கரும்பலகையில் வரைந்து கொள்ளுங்கள். அதைப்பார்த்து மாணவர்களையும் குறிப்பேட்டில் வரையச்செய்து, ஒன்றுபோல் உள்ள படங்களை இணைப்பதற்குக் குறிப்பிட்ட நேரம் அளியுங்கள்.
- இணைக்கும்போது ஒரு கோட்டின்மீது மற்றொரு கோடு குறுக்கிடாமல் இணைக்க வேண்டும்.
- கொடுத்த நேரத்திற்குள், சரியாக இணைத்த மாணவரைக் கரும்பலகையில் இணைத்துக் காட்டச் செய்யுங்கள்.

### எழுத்துகளை நினைவுகூர்தல்

உயிரெழுத்து, மெய்யெழுத்து, **அ, ஆ** வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கரும்பலகை/ விளக்கத்தாளில் எழுதிக்காண்பித்து மாணவர்கள் அனைவரும் எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்களை பயிற்சி நூலில் 'படித்துக்காட்டுக' பகுதியைப் படிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பயிற்சி 1.1இல் உள்ள எழுத்துகள், சொற்களைச் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

### சொற்களைப் படித்தல்

பின்வரும் சொற்களைக் கரும்பலகை / விளக்கத்தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

ஆம்பல் சரம் சணல் அதனால் ஓடம் கப்பல் நாடகம் ஓணான் இறால் மாங்காய்

வயல் தந்தம் அண்ணன் காளான் சாம்பல் வாகனம் நண்பர் உலகம் வற்றல்

மேற்கண்ட சொற்கள் விடையாக வருமாறு வினாக்களைக்கேட்டு உரிய விடையைப் படித்துக்காட்டச் செய்யுங்கள். (எ.கா.)

- ✦ காய் என முடியும் சொல் எது?
- ✦ ஒத்த ஓசையில் முடியும் சொற்கள் எவை?
- ✦ யானையுடன் தொடர்புடைய சொல் ________

அலகு – 1 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

### பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

ஒரே சொல்லில் இரண்டு / மூன்று / நான்கு மெய்யெழுத்துகள் இடம்பெறும் சொற்களை எழுதச்செய்யுங்கள். (எ.கா.) நெல்லிக்காய், பனங்கருப்பட்டி, பட்டுப்பூச்சி...



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 1 7/11/2025 4:54:22 PM

# 2 எழுத்தும் சொல்லும் – 2

(உயிர்மெய் வரிசை – இ, ஈ)

நாள்: 3, 4

## போலச்செய்தல்



- மாணவர்கள் இருவரை எதிரெதிரே நிற்கச் செய்யுங்கள். ஒருவர் தன்னைக் கண்ணாடியாக நினைத்துக்கொள்ள வேண்டும்.
- கண்ணாடியின் முன்னே உள்ள மாணவர் எதைச் செய்கிறாரோ அதை அப்படியே கண்ணாடியாக நினைத்துக்கொண்டவர் செய்ய வேண்டும். (எ.கா.) வணக்கம் சொல்லுதல்...
- அனைத்து மாணவர்களையும் இருவர் இருவராக இவ்வாறு செய்யச் செய்யுங்கள்.

### எழுத்துகளை நினைவுகூர்தல்

உயிர், மெய், அ, ஆ, இ, ஈ வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கரும்பலகை/ விளக்கத்தாளில் எழுதிக்காண்பித்து மாணவர்கள் அனைவரும் எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்களை பயிற்சி நூலில் 'படித்துக்காட்டுக' பகுதியைப் படிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பயிற்சி 2.1இல் உள்ள எழுத்துகள், சொற்களைச் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

## சொற்களைப் படித்தல்

பின்வரும் சொற்களைத் தனித்தனியாக மின்னட்டைகளில் எழுதிக்கொள்ளுங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிழல் | காலணி | விசிறி | நீலம் | சீரகம் | கண்ணீர் | மூங்கில் | தீக்காயம் |
| வீக்கம் | சீற்றம் | தயிர் | திங்கள் | வீரன் | பறித்தார் | வாடாமல்லி | பின்னல் |
| விண்மீன் | நீளம் | மிதிவண்டி | உண்டியல் | நீச்சல் | நீக்கம் | ஒட்டகச்சிவிங்கி | |

- ஒரு மின்னட்டையை மாணவர்களிடம் ஓரிரு வினாடிகள் மட்டும் காட்டி மறைத்துவிடுங்கள். மின்னட்டையில் படித்ததைக் கூறச்செய்யுங்கள்.
- மாணவர்கள் அனைவரும் சரியாகக் கூறினார்கள் எனில், மின்னட்டையைக் காண்பிக்கும் நேரத்தைக் குறைக்கலாம். அந்த நேரத்திற்குள் கூற இயலவில்லை எனில், காண்பிக்கும் நேரத்தை அதிகரிக்கலாம்.
- மாணவர்களுக்குத் தனித்தனியே வாய்ப்பளித்தும் படிக்கச்செய்யலாம்.

அலகு –2 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

### பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

நான்கு/ ஐந்து/ ஆறு எழுத்துகளைக் கொண்ட சொற்களை எழுதச்செய்யுங்கள்.

(எ.கா.) கண்ணாடி, சிலம்பம், கரும்பலகை



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 2 7/11/2025 4:54:23 PM

www.kanimaths.com

# 3 எழுத்தும் சொல்லும் – 3

(உயிர்மெய் வரிசை – உ, ஊ)

நாள்: 5, 6

## புதிரைக்கேட்டு விடைகூறுதல்

ஒவ்வொரு குறிப்பாகக்கூறி, மாணவர்கள் ஊகித்து விடையைக்கூற வாய்ப்பு அளியுங்கள்.

- அதற்கு உயிர் உண்டு; இடம் விட்டு இடம் நகரும்.
- ஒலி எழுப்பும். ஆனால், பேசாது.
- நான்கு கால்கள் இருக்கும்; வால் இருக்கும்.
- கொம்புகள் இருக்காது.
- அதன் பெயர் உயிர் எழுத்தில் தொடங்கும்.
- அதன் பெயர் ஐந்து எழுத்தை உடையது.
- வயிற்றில் தண்ணீரைச் சேமிக்கும்.

ஒட்டகம் என்று கண்டுபிடித்தால் பாராட்டுங்கள். கண்டுபிடிக்கவில்லை என்றால், மேலும் சில குறிப்புகளைக் கூறிக் கண்டுபிடிக்கச் செய்யுங்கள்.

## எழுத்துகளை நினைவுகூர்தல்

உயிர், மெய், அ, ஆ, இ, ஈ, உ, ஊ வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கரும்பலகை/ விளக்கத்தாளில் எழுதிக்காண்பித்து மாணவர்கள் அனைவரும் எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்களை பயிற்சி நூலில் 'படித்துக்காட்டுக' பகுதியைப் படிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பயிற்சி 3.1இல் உள்ள எழுத்துகள், சொற்களைச் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

## சொற்களைப் படித்தல்

பின்வரும் சொற்களைக் கரும்பலகை / விளக்கத்தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சுக்கு | கழுகு | தள்ளு | முறுக்கு | பருப்பு | எலும்பு | பறந்தது | பல்லாங்குழி |
| இரவு | வயிறு | தும்பி | சுண்டல் | சிவப்பு | ஆயுதம் | எழுதியது | புள்ளிவண்டு |
| பூண்டு | மூன்று | கடலூர் | வானூர்தி | உள்ளூர் | தஞ்சாவூர் | குண்டூசிகள் | |
| தூக்கம் | கரூர் | பூங்கா | கூடாரம் | தூண்டில் | மூங்கில்காடு | நூல்கண்டு | |

- நான்கு எழுத்துச் சொற்கள் எத்தனை உள்ளன? என்று கேளுங்கள். முதலில் சரியாகக் கூறிய மாணவரைப் படித்துக்காட்டச் செய்யுங்கள்.
- இதைப் போலவே வெவ்வேறு எண்ணிக்கையில் உள்ள சொற்களையும் கேட்டுப் படிக்கச்செய்யுங்கள்.

அலகு –3 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

இரண்டு எழுத்தைக் கொடுத்து, அவ்வெழுத்துகள் இடம்பெறும் சொற்களை எழுதச்செய்யுங்கள். (எ.கா.) ப, ம் – பம்பரம், ஆப்பம், பணியாரம், ...



Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 3 7/11/2025 4:54:23 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

# 4 சொல்லும் தொடரும் – 1


(உயிர்மெய் வரிசை – எ, ஏ)

நாள்: 7, 8

## அடுத்தது என்ன? கண்டுபிடித்தல்

பின்வரும் படத்தைக் கரும்பலகையில் வரைந்துகொள்ளுங்கள். மாணவர்களை விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான படத்தைக் கண்டுபிடிக்கச்செய்யுங்கள். தேவையெனில் விளக்கம் அளியுங்கள்.

விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான படம் எது? ✓ செய்க.




## எழுத்துகளை நினைவுகூர்தல்

உயிர், மெய், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கரும்பலகை/ விளக்கத்தாளில் எழுதிக்காண்பித்து மாணவர்கள் அனைவரும் எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்களை பயிற்சி நூலில் 'படித்துக்காட்டுக' பகுதியைப் படிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பயிற்சி 4.1இல் உள்ள எழுத்துகள், சொற்கள், தொடர்களைச் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

## சொற்கள், தொடர்களைப் படித்தல்

பின்வரும் சொற்கள், தொடர்களைக் கரும்பலகை / விளக்கத்தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

மெழுகு வென்றது நெருப்பு சேமிப்பு தென்றல் செவ்வாய் பேருந்து கேடயம்
எண்ணெய் வெங்காயம் வெளியே மேற்கு சுண்டெலி வெட்டுக்கிளி
ஊரெங்கும் செங்கல் கேட்டேன் பாடினேன் தேன்சிட்டு வேர்ப்பலா
வேப்பமரம் அமர்ந்தேன் சாப்பிட்டேன் பதினெட்டு மெய்யெழுத்து
வெட்டுக்கிளி வேலியின் மேல் உள்ளது. வெயிலில் வேப்பமர நிழலில் அமர்ந்தேன்.
நெல்லிக்காய் நேற்று வாங்கினேன்.

மேற்கண்ட சொற்கள் / தொடர்கள் விடையாக வருமாறு வினாக்களைக்கேட்டு உரிய விடையைப் படித்துக்காட்டச் செய்யுங்கள்.

(எ.கா.) ✦ எழுத்து வகையைக் குறிக்கும் பெயர் என்ன?
✦ வினைச்சொற்களைப் படித்துக்காட்டுக.
✦ எண்ணிக்கையைக் குறிக்கும் சொல் எது?

அலகு –4 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

கொடுக்கப்பட்ட சொல்லோடு தொடர்புடைய சொற்களை எழுதச்செய்யுங்கள்.

1. குளம் 2. தென்னைமரம் 3. கடை 4. பந்து 5. புத்தகம் 6. மரம்

(எ.கா.) மரம் – வேர், இலை, காற்று, பழம், நிழல், பறவை, கூடு, காடு, ...

33080500808 www.kanimaths.com 33080500808 33080500808



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 4 7/11/2025 4:54:23 PM

www.kanimaths.com

# 5 சொல்லும் தொடரும் – 2

(உயிர்மெய் வரிசை – ஐ)

நாள்: 9,10

## எதிரும் புதிருமாகச் சுற்றுதல்



- படத்தில் காட்டியுள்ளபடி மாணவர்களை இரண்டு கைகளையும் வைத்துக்கொள்ளச் செய்யுங்கள்.
- வலது கையை மட்டும் கடிகாரத் திசையில் சுற்ற வேண்டும். அடுத்து, இடது கையை மட்டும் கடிகாரத்திற்கு எதிர்த்திசையில் சுற்ற வேண்டும்.
- பிறகு ஒரே நேரத்தில் வலது கையைக் கடிகாரத் திசையிலும் இடது கையைக் கடிகாரத்திற்கு எதிர்த்திசையிலும் சுற்ற வேண்டும்.
- தொடர்ந்து பொறுமையாகப் பயிற்சி செய்து பழகப் பழக இவ்வாறு கைகளைச் சுழற்ற முடியும்.

### எழுத்துகளை நினைவுகூர்தல்

உயிர், மெய், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கரும்பலகை/ விளக்கத்தாளில் எழுதிக்காண்பித்து மாணவர்கள் அனைவரும் எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்களை பயிற்சி நூலில் 'படித்துக்காட்டுக' பகுதியைப் படிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பயிற்சி 5.1இல் உள்ள எழுத்துகள், சொற்கள், தொடர்களைச் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

## சொற்கள், தொடர்களைப் படித்தல்

பின்வரும் சொற்கள், தொடர்களைத் தனித்தனியாக மின்னட்டைகளில் எழுதிக்கொள்ளுங்கள்.

மைனா பறவை நீர்யானை வகுப்பறை நத்தை குப்பை திண்ணை
சுரைக்காய் வேர்க்கடலை கெண்டைமீன் எலுமிச்சை மட்டைப்பந்து
விளையாட்டு பச்சைக்கிளி பச்சைப்பயறு முருங்கைக்கீரை

மழை பெய்து குளம் நிரம்பியது.
கூடையில் உள்ள கீரையைக் குதிரை தின்றது.
மாலை நேரத்தில் மரக்கிளையில் நாரை இருந்தது.

- ஒரு மின்னட்டையை மாணவர்கள் பார்க்கும்படி ஓரிரு வினாடிகள் மட்டும் காட்டி மறைத்துவிடுங்கள். மின்னட்டையில் படித்ததைக் கூறச்செய்யுங்கள்.
- மாணவர்கள் அனைவரும் சரியாகக் கூறினார்கள் எனில், மின்னட்டையைக் காண்பிக்கும் நேரத்தைக் குறைக்கலாம். அந்த நேரத்திற்குள் கூற இயலவில்லை எனில், காண்பிக்கும் நேரத்தை அதிகரிக்கலாம்.

அலகு –5 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

ஒரே எழுத்து இரண்டு முறை வரும்படி இடம்பெறும் சொற்களை எழுதச்செய்யுங்கள். (எ.கா.) 'று' – சுறுசுறுப்பு, எறும்புப்புற்று,...



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 5 7/11/2025 4:54:24 PM

www.kanimaths.com


# 6 சொல்லும் தொடரும் – 3

(உயிர்மெய் வரிசை – ஒ, ஓ, ஔ)

நாள்: 11, 12

## கை எடுக்காமல் வரைதல்

- பின்வரும் படங்களில் முதல் படத்திற்கான புள்ளிகளைக் கரும்பலகையில் வைத்து, மாணவர்களைக் கை எடுக்காமல் வரையச்செய்யுங்கள்.
- பிறகு, குறிப்பேட்டிலும் புள்ளிகளை வைத்து கை எடுக்காமல் வரையச்செய்யுங்கள்.



## எழுத்துகளை நினைவுகூர்தல்

உயிர், மெய், அ முதல் ஔ வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கரும்பலகை/ விளக்கத்தாளில் எழுதிக்காண்பித்து மாணவர்கள் அனைவரும் எழுத்துகள் அறிந்திருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்களை பயிற்சி நூலில் 'படித்துக்காட்டுக' பகுதியைப் படிக்கச் செய்யுங்கள்.

மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பயிற்சி 6.1 இல் உள்ள எழுத்துகள், சொற்கள், தொடர்களைச் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

## சொற்கள், தொடர்களைப் படித்தல்

பின்வரும் சொற்கள், தொடர்களைக் கரும்பலகை / விளக்கத்தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொய்யா | பொங்கல் | கோட்டை | நொடிமுள் | கோலம் | சொட்டு |
| நொச்சி | சோளம் | எதிரொலி | கோதுமை | சுவரொட்டி | மொட்டு |
| பாட்டொன்று | மொச்சை | தொலைபேசி | தமிழ்மொழி | பூங்கொத்து | தோரணம் |
| பொம்மை | போட்டி | வான்கோழி | காணொளி | தொப்பி | தோழன் | மோதிரம் |
| மகிழ்வோம் | கடலோரம் | அலையோசை | தொலைநோக்கி | சாலையோரம் | பச்சோந்தி |

வானொலியில் பாட்டொன்று கேட்டது.

கடலோரம் அலையோசை கேட்போம்.

முல்லைக்கொடியில் நிறைய மொட்டுகள் உள்ளன.

- நான்கு சொல் உள்ள தொடர்களைப் படித்துக்காட்டுக.
- 'அலையோசை' என்னும் சொல் உள்ள தொடர் எது?
- உங்களுக்குப் பிடித்த தொடரைப் படித்துக்காட்டுக.

இதைப் போலவே வெவ்வேறு வினாக்களைக் கேட்டுப் படிக்கச்செய்யுங்கள்.

அலகு – 6 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

ஒரு தொடரில் அனைத்துச் சொற்களிலும் ஒரே முதல் எழுத்து அமையுமாறு தொடர் எழுதச்செய்யுங்கள். (எ.கா.) பாப்பா பாட்டுப் பாடினாள், ...



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 6 7/11/2025 4:54:25 PM

www.kanimaths.com

# படிக்கப் பழகுதல்

- எழுத்துகளை ஒலிக்கவும் சொற்கள், தொடர்களைப் படிக்கவும் மாணவர்கள், அலகு 1–6 வரை பயிற்சிகளைச் செய்திருப்பர்.

- அதன் பிறகும் எழுத்துகளை இணைத்துச் சொல்லாகப் படிக்க இடர்ப்படும் மாணவர்கள் இருப்பின் அவர்களும் தொடர்ந்து பயிற்சியைப் பெறுவதற்குப் **படிக்கப் பழகுதல்** பகுதி உதவியாக அமையும்.

- இப்பகுதியை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கம் என்ற அளவில் தொடர்ந்து படிக்கச் செய்யலாம்.

  - ஒவ்வொரு எழுத்தின்கீழ், புள்ளியிட்டுப் படித்தல்,
  - இரண்டு எழுத்துகளை இணைத்துக் கோடிட்டுப் படித்தல்,
  - அசைபிரித்துப் படித்தல்

ஆகிய உத்திகளுள் உங்கள் மாணவர்களுக்கு ஏற்றதைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வழிகாட்டுங்கள்.




Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com



# படிக்கப் பழகுதல்





## படிப்பேன்! இணைத்துப் படிப்பேன்!



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ன் | ள் | நா | க | மா | ழ் | ர் | ம் | ண் |
| ய் | தா | பா | யா | ல் | கா | ஔ | பட் | கட |
| கள் | பர் | மக | தள | பல் | தட | தாத் | நண் | கள |
| மர | நாங் | இவ | றம் | ஈச | ஏற் | ஐவ | இத | வழ |
| கம் | மஞ் | மத் | காக | பழ | வன | ஒட் | கட் | மல |
| ஊத | உர | ஆல | வான | வாடா | என் | ஆம் | அவ | சள் |
| அவ | பட | கல | பள | சர | டம் | டக | மக | ஓணா |



## அட்டவணையைப் படிப்பேன்! விடை எழுதுவேன்!



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கல் | பல் | கண் | பகல் | மண் | மகள் | மகன் |
| பட்டம் | கட்டம் | கடல் | தடகளம் | கால் | மான் | தாய் |
| மாமா | தாத்தா | நாள் | பாடம் | காய் | பாய் | நண்பர் |
| மாமரம் | ஏற்றம் | மஞ்சள் | பால் | மணல் | ஐவர் | இதழ் |
| காகம் | மத்தளம் | பழம் | வனம் | ஒட்டகம் | வாடாமலர் | ஓணான் |
| ஊதல் | உரல் | ஆலமரம் | வானம் | ஈசல் | என்ன | ஏன் |
| யார் | அவன் | அவள் | நான் | நாம் | நாங்கள் | இவர் |
| அவர்கள் | படபட | கலகல | பளபள | சரசர | வழ வழ | ஆம்பல் |

| ஒத்த ஓசையுடைய சொற்கள் | உறவுப் பெயர்கள் |
|---|---|
| | |

3308050080808
www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 8 7/11/2025 4:54:27 PM

# படிக்கப் பழகுதல்

## படிப்பேன்! இணைத்துப் படிப்பேன்!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சி | றி | ளி | பி | ர் | ல் | ம் | னி | க |
| டி | ழ் | கி | தி | கம் | பன் | இள | தண் | கறி |
| மினி | கணி | சிற் | ணீர் | னீர் | நீர் | ஆனா | வான | லால் |
| வில் | நில | ஆத | இத | அத | எப் | இஞ் | படி | னால் |
| கல் | தீப் | தம் | பாரீ | அத | எனி | ற்கா | பந் | லீர |
| மிதி | காய் | மகி | இவ் | அப் | மகி | வண் | வாறா | ழச் |
| படி | யானா | மின் | ச்சி | டக | விங் | சீர | அரி | ஒட் |

## அட்டவணையைப் படிப்பேன்! விடை எழுதுவேன்!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கிளி | ஆடி | காய்கறி | ஆழி | இஞ்சி | வாலி | மிதிவண்டி |
| எலி | விசிறி | தாவி | எப்படி | கல்லீரல் | பிடி | காரியாசான் |
| கனி | பள்ளி | கணினி | சிற்பி | சீரகம் | அரிசி | வல்வில் ஓரி |
| வீதி | பன்னீர் | ஏணி | தண்ணீர் | தீப்பந்தம் | வாரி | ஒட்டகச்சிவிங்கி |
| ஒளி | இளநீர் | பாரீர் | ஆனால் | மின்மினி | கீரி | சின்னஞ்சிறிய |
| இனி | அதற்காக | மயில் | வானவில் | மகிழ்ச்சி | நிலம் | இவ்வாறாக |
| படி | ஆதலால் | எனில் | இதனால் | அதனால் | வழி | அப்படியானால் |

| உனக்குப் பிடித்த சொற்கள் | உன் நண்பர்களுக்குப் பிடித்த சொற்கள் |
|---|---|
| | |



Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 9 7/11/2025 4:54:29 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# படிக்கப் பழகுதல்

## படிப்பேன்! இணைத்துப் படிப்பேன்!

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ள் | ப | று | ல் | ம் | பு | ர் | கு |
| து | ழு | நூற் | ட்டி | ணாங் | நூல் | கதவு | துண்டு |
| மிளகு | நுங்கு | பூச்சி | புற்று | முறம் | முகம் | முத்து | குன்று |
| உளுந் | தூக்க | பூசணி | பூட்டு | மூச்சு | பஞ்சு | குடம் | குருவி |
| மூங்கி | தூண்டி | துடுப் | வடக் | நன்னூ | குளிரூ | தகடூ | விடுப் |
| சூரிய | விருந் | அனுப் | உள்ளூ | சிற்றூ | எண்ணூ | குரங் | புநர் |
| எலும் | பூக்க | வல்லூ | காந்தி | சுண்ட | மற்று | கண்டு | கரும் |

## அட்டவணையைப் படிப்பேன்! விடை எழுதுவேன்!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புழு | படகு | பூட்டு | எலும்பு | பூக்கள் | வல்லூறு | சூரியகாந்தி |
| வீடு | மூச்சு | பஞ்சு | துண்டு | சுண்டல் | மற்றும் | நூற்கண்டு |
| கூடு | குன்று | மிளகு | கரும்பு | விருந்து | எதற்கு | அனுப்புநர் |
| கணு | பூசணி | நுங்கு | உள்ளூர் | சிற்றூர் | குடு குடு | எண்ணூறு |
| நூல் | பூச்சி | முகம் | குரங்கு | மூங்கில் | கூறு | தூண்டில் |
| குடம் | புற்று | துடுப்பு | வடக்கு | நன்னூல் | சுட சுட | குளிரூட்டி |
| கதவு | முறம் | தகடூர் | விடுப்பு | உளுந்து | முத்து | தூக்கணாங் குருவி |

| வீட்டில் பயன்படுபவை | 'கு' எழுத்து உள்ள சொற்கள் |
|---|---|
| | |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 10 7/11/2025 4:54:30 PM

www.kanimaths.com

# படிக்கப் பழகுதல்

## படிப்பேன்! இணைத்துப் படிப்பேன்!

| | | | | |
|---|---|---|---|---|
| மே/கம் | தென்/றல் | செங்/குள/வி | கட்/டெறும்/பு | பெட்/டிச்/செய்/தி |
| சே/வல் | வெங்/கா/யம் | அதற்/கென்/ன | என்/னென்/ன | சேப்/பக்/கிழங்/கு |
| மொட்/டு | தேர்ந்/தெடு | பெருங்/கா/யம் | நெருப்/பு | வெள்/ளரிக்/காய் |
| கே/டயம் | செந்/தமிழ் | நெல்/லிக்/காய் | பே/ரிக்/காய் | அப்/படி/யென்/றால் |
| மேற்/கு | கேழ்/வர/கு | பே/ரீச்/சம்/பழம் | ஆங்/காங்/கே | அப்/படி/யெல்/லாம் |
| என்/னை | செம்/மண் | ஏ/னென்/றால் | மெழு/குவத்/தி | வந்/தே/மா/தரம் |
| வெள்/ளம் | தேங்/காய் | தேன்/சிட்/டு | செம்/பருத்/தி | நே/ருக்/கு/நேர் |

## அட்டவணையைப் படிப்பேன்! விடை எழுதுவேன்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெடி | மேகம் | தென்றல் | வெங்காயம் | தேர்ந்தெடு | பெட்டிச் செய்தி |
| செடி | சேவல் | மொட்டு | கெளுத்தி | செங்குளவி | அதற்கென்ன |
| நெல் | இங்கே | கேடயம் | தேன்சிட்டு | பெருங்காயம் | சேப்பக்கிழங்கு |
| தேள் | மேற்கு | என்னை | கட்டெறும்பு | நெல்லிக்காய் | வெள்ளரிக்காய் |
| வேலி | தேக்கு | செம்மண் | ஆங்காங்கே | பேரீச்சம்பழம் | அப்படியென்றால் |
| தேனீ | வேடன் | தேங்காய் | கேழ்வரகு | என்னென்ன | அப்படியெல்லாம் |
| தேர் | மேளம் | அங்கே | பேரிக்காய் | ஏனென்றால் | மெழுகுவத்தி |
| வேர் | நெருப்பு | செந்தமிழ் | வேப்பமரம் | வந்தே மாதரம் | என்றெண்ணி |
| நேரம் | தெப்பம் | வெள்ளம் | செம்பருத்தி | நேருக்கு நேர் | வேடந்தாங்கல் |

| உயிர் உள்ளவை | உணவுப் பொருள்கள் |
|---|---|
| | |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 11 7/11/2025 4:54:32 PM

www.kanimaths.com

# படிக்கப் பழகுதல்

## படிப்பேன்! இணைத்துப் படிப்பேன்!

| | | | |
|---|---|---|---|
| குதி/ரை | வல/சை | சிறுத்/தை | குடை/மிள/காய் |
| வை/கா/சி | மளி/கை | கைப்/பை | எலு/மிச்/சை |
| உண்/மை | அரு/மை | திண்/ணை | பனை/மரம் |
| கவி/தை | தை/யல் | பச்/சை | கற்/றா/ழை |
| நிறை/ய | பார்/வை | மெத்/தை | வெற்/றிலை |
| அத்/தை | வை/ரம் | குழந்/தை | வரை/யா/டு |
| தென்/னை | பல/கை | வா/ழைத்/தார் | முருங்/கை |

## அட்டவணையைப் படிப்பேன்! விடை எழுதுவேன்!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மேடை | விதை | குதிரை | வைகாசி | உண்மை | சைகை | வாழைத்தார் |
| ஓசை | வீணை | நிறைய | அத்தை | தென்னை | வலசை | குடைமிளகாய் |
| வடை | கலை | மளிகை | அருமை | சிறுத்தை | காடை | எலுமிச்சை |
| குகை | நகை | தையல் | பார்வை | பனைமரம் | வைரம் | கற்றாழை |
| வாழை | கூடை | பலகை | கைப்பை | கவிதை | பாதை | வெற்றிலை |
| விடை | மேசை | பச்சை | மெத்தை | வரையாடு | இலை | முருங்கை |
| மாலை | மழை | மைனா | குழந்தை | திண்ணை | இசை | விளையாட்டு |

| உயிர் அற்றவை | தாவரங்களில் இருந்து கிடைப்பவை |
|---|---|
| | |

33080500808
www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 12 7/11/2025 4:54:34 PM

www.kanimaths.com

# படிக்கப் பழகுதல்

## படிப்பேன்! இணைத்துப் படிப்பேன்!

| | | | |
|---|---|---|---|
| பொருள் | மோ/திரம் | கோட்/டை | சோ/லைக்/குயில் |
| தொட்/டி | நா/டோ/டி | பௌர்/ணமி | பொன்/வண்/டு |
| கொக்/கு | சொந்/தம் | தொலை/வு | குயி/லோ/சை |
| பொட்/டு | தோட்/டம் | தோ/ரணம் | வளை/யோ/சை |
| கோ/லம் | போர்/வை | தோ/சை | தொழு/வோம் |
| சோ/ளம் | பொறுப்/பு | சோ/று | கோ/ரைப்/புல் |
| மொட்/டு | கௌ/தா/ரி | சோம்/பு | கா/ணொலி |

## அட்டவணையைப் படிப்பேன்! விடை எழுதுவேன்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நொடி | பொருள் | கோடு | மௌவல் | கோபுரம் | தொழுவோம் |
| சொல் | தொட்டி | கொடி | தோட்டம் | கோட்டை | ஆமையோடு |
| தோசை | கொக்கு | மொட்டு | போர்வை | பௌர்ணமி | கோரைப்புல் |
| சோறு | பொட்டு | மோதிரம் | பொறுப்பு | தொலைவு | பொன்வண்டு |
| தோழி | கோலம் | நாடோடி | சொட்டு | பேரொலி | சோலைக்குயில் |
| சோம்பு | சோளம் | தொகை | கௌதாரி | தோரணம் | குயிலோசை |
| போட்டி | பொறி | சொந்தம் | வௌவால் | காணொலி | வளையோசை |

| உணவுப் பொருள்கள் | தோட்டத்தில் காணப்படுபவை |
|---|---|
| | |

330805008



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 13 7/11/2025 4:54:35 PM

www.kanimaths.com

# 7 சொல் உருவாக்குதல்

நாள்:13,14

## கற்றல் விளைவு

◈ மொழிவிளையாட்டின்வழிச் சொற்களஞ்சியம் பெறுவர்.

- சொற்பட்டியல் 1இல் உள்ள சொற்களை விளக்கத்தாளில் எழுதுங்கள். நீங்கள் காண்பிக்கும் நேரத்திற்குள் படித்துக்காட்டும் வகையில் மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.
- அச்சொற்கள் சார்ந்து வினாக்கள் கேட்டும் படிக்கச் செய்யுங்கள்.
  (எ.கா.) மலர் வகையில் ஒன்று எது?

## சொல் உருவாக்குதல்

சொல்லிலிருந்து சொல் உருவாக்குவதற்கு ஏற்ப, எடுத்துக்காட்டில் உள்ளது போல் ஒரு சொல்லைக் கரும்பலகையில் எழுதுங்கள். அச்சொல்லின் இறுதியில் முடியும் சொல்லைக்கொண்டு, தொடங்கும் சொற்களை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

- படிக்கட்டு – கட்டுக்கதை – கதைப்பாடல் – பாடல்வரி – வரிக்குதிரை – குதிரைவண்டி – வண்டிமாடு

அலகு –7 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

**பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

கொடுக்கப்பட்ட சொல்லை நீட்டித்துச் சொல் எழுதச்செய்யுங்கள்.
(எ.கா.) தொலை, தொலைக்காட்சி, தொலைநோக்கி, தொலைவரி, தொலைதூரம்...

# 8 தொடர் உருவாக்குதல்

நாள்:15,16

## கற்றல் விளைவு

◈ தொடர்களைப் படிப்பர்; உருவாக்குவர்.

- சொற்பட்டியல் 2இல் உள்ள சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். அச்சொற்கள் தொடர்புடைய வினாக்களைக்கேட்டு மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.

## தொடர் உருவாக்கிக் கூறுதல்

- சொற்களைக் கரும்பலகை /விளக்கத்தாளில் காட்சிப்படுத்துங்கள்.
- சொற்களை இணைத்துத் தொடர் உருவாக்கிக்கூறச் செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேன்கூடு | பறந்தது | தேனீ | பார்த்தேன் | வெட்டுக்கிளி | வெள்ளரிக்காய் |
| தொட்டாற்சிணுங்கி | கணினி | அஞ்சலகம் | தொட்டுப்பார் | பயிற்சிமையம் | |

அலகு – 8 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 14 7/11/2025 4:54:35 PM

**பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

முன்னிருந்து படித்தாலும் பின்னிருந்து படித்தாலும் பொருள்தரும் தொடர்களை எழுதச்செய்யுங்கள். (எ.கா.) மேகம் தந்த மழை – மழை தந்த மேகம்

## 9 பாடல்

நாள்:17,18

**கற்றல் விளைவு**

◈ **பாடலைப் படித்துப் புரிந்துகொண்டு விடையளிப்பர்; பாடல் உருவாக்கி எழுதுவர்.**

- சொற்பட்டியல் 3இல் உள்ள சொற்களை விளக்கத்தாளில் எழுதுங்கள். நீங்கள் காண்பிக்கும் நேரத்திற்குள் படித்துக்காட்டும் வகையில் மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.
- அச்சொற்கள் சார்ந்து வினாக்கள் கேட்டும் படிக்கச் செய்யுங்கள். (எ.கா.) ஒருவருக்குச் செய்தி அனுப்ப இது தேவைப்படும்.
  வீட்டைப் பாதுகாக்கும் பொருள்கள் எவை?

### பாடலைக் கேட்டு அதன் கருத்தைக் கூறுதல்

- பாடலைப் படித்துக்காட்டுங்கள். பாடலின் கருத்தை வகுப்பறையில் மாணவர்களைக் கூறச்செய்யுங்கள்.

கருத்த மேகம் கண்டாலே
கவிதை பாடும் கவிஞன்போல்

விரித்துத் தோகை ஆட்டுகின்ற
வித்தை நீயும் கற்றுக்கொள்ள

பள்ளிக்கூடம் போனாயா
பாடம் பலவிதம் படித்தாயா

இல்லை உன்போல் ஆடுவதற்கே
யாரால் இங்கு இயலுமக்கா!

அழகாய் ஆடும் மயிலக்கா
ஆசான் உனக்கு யாரக்கா?

(எ.கா.) மயிலைப் பற்றிய பாடல் இது. மயில் எனக்குப் பிடித்த பறவை. மயில் தோகை விரித்து ஆடுவதை நான் பார்த்திருக்கிறேன்.

அலகு –9 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

**பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

கொடுக்கப்பட்ட சொல் இடம்பெறுமாறு பாடல் எழுதச்செய்யுங்கள்.

(எ.கா.) ✦ நண்பர்கள் ✦ பாட்டு ✦ மேகம் ✦ மீன்கள்



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 15 7/11/2025 4:54:36 PM

# 10 உரைப்பகுதி

நாள்:19, 20

## கற்றல் விளைவுகள்

- உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து விடையளிப்பர்.
- தங்குதடையின்றி விரைவாகப் படிக்கும் திறன்பெறுவர்.

- சொற்பட்டியல் 4இல் உள்ள சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். அச்சொற்கள் தொடர்புடைய வினாக்களைக்கேட்டு மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.

(எ.கா.) மழைவரும் என்பதை எது உணர்த்தும்?

- திசையைக் குறிக்கும் சொல் எது?
- ஒரே எழுத்து இரண்டு முறை உள்ள சொல் ________.

## உரைப்பகுதியைப் படித்துக்காண்பித்து வினா கேட்டல்

பின்வரும் உரைப்பகுதியைப் படித்துக் காண்பித்து வினா கேளுங்கள்.

மணிவண்ணன் காலையில் அவசர அவசரமாகக் கிளம்பினார். ஏனெனில், 6 மணிக்குள் தொடர்வண்டி நிலையம் செல்லவேண்டும். முன்பதிவு செய்திருந்த பயணச்சீட்டுடன் தொடர்வண்டி நிலையம் வந்த அவர் அறிவிப்புப் பலகையைப் பார்த்தார். தன் பயணச் சீட்டினையும் பார்த்தார். பிறகு வீட்டிற்கே திரும்பிவிட்டார்.

மணிவண்ணன் ஏன் தொடர்வண்டியில் ஏறவில்லை?

அ) தொடர்வண்டியில் கூட்டம் அதிகமிருந்தது.

ஆ) தொடர்வண்டி புறப்பட்டுவிட்டது.

இ) அவரின் பயணச்சீட்டு மாலை 6:00 மணிக்கானது. (விடை)

ஒரு செய்தியைக் கேட்கும்/ படிக்கும்போது அதன் கருத்தை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டுமென உணர்த்துங்கள்.

(எ.கா.)
- கேட்ட/ படித்த செய்தியின் கருத்து என்ன?
- செய்தியில் இடம்பெற்றிருந்த நிகழ்வுகள் யாவை?
- செய்தியில் இடம்பெற்ற பெயர்களைக் குறிப்பிடுக.
- செய்தியில் எத்தகைய சூழல் அமைந்துள்ளது?
- கேட்கப்பட்ட வினாக்களையும் தெரிவுகளையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகிய வழிகாட்டுதல்களைக் கூறுங்கள்.

அலகு –10 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

மாணவர்கள் விரும்பும் சூழல்சார்ந்து உரைப்பகுதி எழுதச்செய்யுங்கள்.
உரைப்பகுதிக்குப் பொருத்தமான வினாக்களை உருவாக்கச் செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 11 வினா

நாள்: 21, 22

## கற்றல் விளைவு

◈ வினா உருவாக்கும் திறன் பெறுவர்.

- சொற்பட்டியல் 5இல் உள்ள சொற்களை விளக்கத்தாளில் எழுதுங்கள். நீங்கள் காண்பிக்கும் நேரத்திற்குள் படித்துக்காட்டும் வகையில் மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.

### வினா உருவாக்கிக் கூறுதல்

- பின்வரும் நிகழ்வினைப் படித்துக்காண்பித்து / மாணவர்களைக் குழுவில் படிக்கச்செய்து வினாக்களைக் கேட்க வழிகாட்டுங்கள்.

செடியிலிருந்து இலை ஒன்று கீழே விழுந்தது. விழுந்த இலை ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பியது. வழியில் யாரோ பாடும் இன்னிசை கேட்டது. சட்டென நிமிர்ந்து பார்த்ததும் கண்ணுக்குக் குயில் ஒன்று தெரிந்தது. குயிலைப் பாராட்ட நினைத்தது. அந்த இலை, குயிலைப் பாராட்டி இருக்கும்தானே!

(எ.கா.) ✦ நிகழ்வு எதைப் பற்றியது? ✦ நிகழ்வில் உள்ள பெயர்கள் யாவை?
✦ ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பியது எது? ✦ விழுந்தது, கிளம்பியது – எது?

அலகு –11 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

**பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

படக்கதை, புதிர்க்கதை, செய்தித்தாள் செய்தி போன்றவற்றைப் படித்துக்காண்பித்து/ மாணவர்களைப் படிக்கச்செய்து வினாக்களை உருவாக்கி எழுதச்செய்யுங்கள்.

# 12 உரையாடல்

நாள்: 23, 24

## கற்றல் விளைவு

◈ உரையாடலைப் படித்து விடையளிப்பர்; உரையாடலை எழுதுவர்.

- சொற்பட்டியல் 6இல் உள்ள சொற்களை விரைந்து படிக்கப் பயிற்சி அளியுங்கள்.

### உரையாடல் நிகழ்த்துதல்

சூழல்கொடுத்து அதற்கேற்ப மாணவர்களை உரையாடச் செய்யுங்கள். (எ.கா.)

- ✦ நூலகர் – வாசகர் (நூலகத்தில் புத்தகம் எடுப்பது சார்ந்து நூலகருடன் உரையாடுதல்)
- ✦ மாணவர்களுக்குப் பிடித்த பறவை/விலங்கு ஒன்றுடன் பேசுவது போன்று கற்பனையாக உரையாடுதல்)

அலகு –12 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

**பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

மாணவர்கள் விரும்பும் சூழல்சார்ந்து உரையாடல் எழுதச்செய்யுங்கள்.
(எ.கா.) துப்புரவுப் பணியாளரைச் சந்தித்தல், சிற்றுண்டி வழங்குநரிடம் பேசுதல்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 17 7/11/2025 4:54:36 PM

www.kanimaths.com

# 13 கதை

நாள்: 25, 26

## கற்றல் விளைவு

◈ கதையைப் படித்துக் கருத்தை வெளிப்படுத்துவர்; கற்பனையாகக் கதை உருவாக்கி எழுதுவர்.

- தொடர்ப்பட்டியல் 1இல் உள்ள தொடர்களை விளக்கத்தாளில் எழுதுங்கள். நீங்கள் காண்பிக்கும் நேரத்திற்குள் படித்துக்காட்டும் வகையில் மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.
- அத்தொடர்கள் சார்ந்து வினாக்கள் கேட்டும் படிக்கச்செய்யுங்கள்.

(எ.கா.) ✦ இரண்டு சொற்களில் அமைந்த தொடரைக் கண்டுபிடிக்க.

✦ வானம் தொடர்புடைய தொடர்கள் எத்தனை உள்ளன?

✦ பறவையின் பெயர் இடம்பெறும் தொடர்கள் எவை?

## கதையைத் தொடர்ந்து சொல்லுதல்

- நீங்கள் கதையின் முதல் வரியைக் கூறி, அடுத்தடுத்த வரிகளை மாணவர்கள் ஒவ்வொருவராகக் கூறச்செய்து முழுக்கதையை உருவாக்குங்கள்.
- கதையில் திருப்பம் ஏற்படுத்த நினைத்தால் நீங்கள் இடையிடையே சில வரிகளைக் கூறலாம்.
- கதையின் தொடக்க வரிகளாகக் கீழ்க்காண்பவை இருக்கலாம்.
  - ✦ தொலைவில் வருபவரைப் பார்த்துத் துள்ளிக்குதித்தது நாய்க்குட்டி.
  - ✦ திடீரென ஒரு சத்தம் கேட்டது.
  - ✦ புலியைப் பார்த்த மான் சிரித்தது.
  - ✦ இருட்டில் பெரிய உருவம் ஒன்று தெரிந்தது.
  - ✦ வாசற்படியில் கதவில் ஒரு புத்தகம் இருந்தது.
  - ✦ கைதட்டல் ஓசைகேட்டு வெளியே வந்தேன்.

அலகு –13 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

**பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

கொடுக்கப்பட்ட தலைப்பில், கதைமாந்தர் இடம்பெறும் வகையில் கதை எழுதச்செய்யுங்கள். (எ.கா.) கோடை விடுமுறை, போக்குவரத்துக் காவலர்



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 18 7/11/2025 4:54:36 PM

# 14 நாள்குறிப்பு

நாள்: 27, 28

## கற்றல் விளைவு

◈ நாள்குறிப்பைப் படித்துப் புரிந்துகொள்வர், நாள்குறிப்பு எழுதும் திறன்பெறுவர்.

◉ தொடர்ப்பட்டியல் 2இல் உள்ள தொடர்களை விளக்கத்தாளில் எழுதுங்கள். நீங்கள் காண்பிக்கும் நேரத்திற்குள் படித்துக்காட்டும் வகையில் மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.

◉ அத்தொடர்கள் சார்ந்து வினாக்கள் கேட்டும் படிக்கச் செய்யுங்கள்.

(எ.கா.)
- குறைந்த எண்ணிக்கையில் சொற்கள் உடைய தொடரைக் கூறுக.
- நீண்ட தொடரைப் படித்துக்காட்டுக.
- நீர்நிலையின் பெயர் உள்ள தொடர் எது?

## குறிப்புகளைக் கொண்டு உரையாடுதல்

ஒரு நாளின் நிகழ்வுகளைக் கூறச்செய்யுங்கள், அவற்றுள்,

- நீங்கள் விரும்பிச் செய்த செயல்
- உங்களுக்கு மிகவும் பிடித்த நிகழ்வு
- புதியதாக மேற்கொண்ட செயல்
- நீங்கள் பிறருக்கு உதவியாகச் செய்த செயல்
- உங்களை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்த செயல்
- பிறருக்குத் தெரிவிக்கும் வகையில் மனத்தில் பதிந்தவை
- உங்களுக்குப் புதியதாகக் கிடைத்த நட்பு அனுபவம்
- ஒரு நாள் ஏற்பட்ட அனுபவத்தால் தொடர்ந்து செய்து வருபவை
- உங்களை வியப்படையச் செய்த நிகழ்வு

போன்றவை குறித்துக் கருத்துகளைப் பதிவுசெய்யக் கூறுங்கள். இவ்வாறு ஒரு நாளில் குறிப்பிட்டுக் கூறும்வகையில் நிகழ்ந்தவற்றை எழுத்தாகப் பதிவு செய்வதே நாள்குறிப்பு என்பதை அறியச்செய்யுங்கள்.

அலகு –14 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

மாணவர்கள் விரும்பும் நாளைத் தேர்ந்தெடுத்து நாள்குறிப்பு எழுதச்செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 19 7/11/2025 4:54:37 PM

# 15 கடிதம்

நாள்: 29, 30

## கற்றல் விளைவு

◈ கற்பனையாகவும் நோக்கமறிந்தும் கடிதம் எழுதுவர்.

◉ தொடர்ப்பட்டியல் 3இல் உள்ள தொடர்களை விளக்கத்தாளில் எழுதுங்கள். நீங்கள் காண்பிக்கும் நேரத்திற்குள் படித்துக்காட்டும் வகையில் மாணவர்களை விரைந்து படித்தலுக்குப் பயிற்சி அளியுங்கள்.

## கடிதத்தின் நோக்கமறிதல்

பின்வரும் தொடர்களைத் துண்டுத்தாளில் எழுதி மேசைமீது வையுங்கள்.

- வானில் நகர்ந்து நகர்ந்து செல்கிறாய்.
- உன் வெண்மையும் அழகுதான்; கருமையும் அழகுதான்.
- பஞ்சு போன்ற வெண்மை உனக்கு எப்படிக் கிடைத்தது?
- ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் ஒரு வடிவத்தில் தெரிகின்றாய்.
- வானத்தைச் சுற்றிப் பார்க்க உன்னுடன் அழைத்துச் செல்வாயா?

மாணவர்களை ஒவ்வொரு துண்டுத்தாளாக எடுத்துப் படிக்கச் செய்யுங்கள்.

அனைத்துத் தொடர்களையும் படித்தபிறகு, இப்படியெல்லாம் நாம் யாரிடம் சொல்ல நினைப்போம் என்றுகேட்டு, மாணவர்கள் மேகம் / நிலா என்றவாறு கண்டுபிடிக்க வழிகாட்டுங்கள்.

- இவ்வாறு, உறவினர், நண்பர், சுற்றியுள்ள பொருள்களுள் ஒன்று போன்றவற்றை மையப்படுத்தித் தொடர்களை உருவாக்கச் செய்து இச்செயல்பாட்டினைச் செய்யலாம்.
- செயல்பாட்டின் இறுதியில், தொலைவில் உள்ளவர்களுக்கு நாம் கூற நினைப்பதை எழுத்துவழியாக வெளிப்படுத்துவதே கடிதம் என்பது குறித்து விளக்கம் கொடுங்கள்.
- கடிதம் கற்பனையாகவும் நோக்கம், தேவை கருதி உறவினர்களுக்கும் அலுவலர்களுக்கும் எழுதப்படுகிறது என்றும் விளக்கமளியுங்கள்.

அலகு –15 பயிற்சி நூல் செயல்பாடுகளைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## பயிற்சிகளை விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

மாணவர்களே விரும்பும் தலைப்பில் கற்பனைக் கடிதம் எழுதச்செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 20 7/11/2025 4:54:37 PM

## சொற்பட்டியல் 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரம் | ஓடம் | இறால் | தந்தம் | கப்பல் | அண்ணன் |
| மரம் | காகம் | ஓணான் | வற்றல் | உலகம் | ஆலமரம் |
| படம் | வயல் | காளான் | நண்பர் | மாங்காய் | பலாமரம் |
| பலர் | சணல் | தாத்தா | சாம்பல் | அதனால் | வாடாமலர் |
| மலர் | மணல் | நாடகம் | வாகனம் | உண்டான் | ஆம்பல்மலர் |

## சொற்பட்டியல் 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிழல் | காலணி | திங்கள் | வானவில் | மின்விசிறி | மகிழ்ந்தனர் |
| நீலம் | சீரகம் | விண்மீன் | பாடினாள் | நீர்வீழ்ச்சி | படிக்கலாம் |
| நீளம் | வீக்கம் | மூங்கில் | உண்டியல் | ஓட்டினார் | இஞ்சித்துண்டு |
| தயிர் | நீச்சல் | கண்ணீர் | பறித்தார் | சிந்தித்தார் | இயந்திரங்கள் |
| வீரன் | நீக்கம் | தீக்காயம் | வாடாமல்லி | பரிசளித்தார் | ஒட்டகச்சிவிங்கி |
| விசிறி | சீற்றம் | பின்னல் | மிதிவண்டி | மணற்சிற்பம் | இலக்கியமன்றம் |

## சொற்பட்டியல் 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கு | தள்ளு | கூடாரம் | தஞ்சாவூர் | புள்ளிவண்டு | புல்லாங்குழல் |
| கழுகு | பருப்பு | வானூர்தி | சதுரங்கம் | குண்டூசிகள் | குழிப்பணியாரம் |
| தும்பி | கடலூர் | உள்ளூர் | நூல்கண்டு | மாடவிளக்கு | திண்டுக்கல்பூட்டு |
| மூன்று | முறுக்கு | தூண்டில் | சிறுவர்கள் | மூங்கில்காடு | குருவிக்கூட்டம் |
| கரூர் | சிவப்பு | சுற்றுலா | வடக்கயிறு | தூண்டில்மீன் | இருண்டவானம் |
| வயிறு | எலும்பு | திருவிழா | மரக்கதவு | எறும்புப்புற்று | துண்டுச்சீட்டுகள் |
| இரவு | தூக்கம் | நூலகம் | பல்லாங்குழி | கும்மிப்பாடல் | சிறப்புவிருந்தினர் |
| பூங்கா | ஆயுதம் | பறந்தது | ஆண்டுவிழா | சிட்டுக்குருவி | சிறுதானியஉணவு |
| பூண்டு | சுண்டல் | எழுதியது | காவிரியாறு | அங்குமிங்கும் | மின்னஞ்சல்முகவரி |

## சொற்பட்டியல் 4

| | | | | |
|---|---|---|---|---|
| மெழுகு | தென்றல் | வெங்காயம் | வெட்டுக்கிளி | என்னவென்றால் |
| மேற்கு | செங்கல் | பதினெட்டு | மெய்யெழுத்து | தெள்ளத்தெளிவு |
| வெளியே | எண்ணெய் | சென்றனர் | வெல்லம் | சேமிப்புக்கிடங்கு |
| கேடயம் | செவ்வாய் | ஏனெனில் | வேப்பமரநிழல் | வெள்ளரிப்பிஞ்சு |
| சேமிப்பு | சுண்டெலி | ஊரெங்கும் | கேட்டேன் | தேன்நெல்லிக்காய் |
| நெருப்பு | பாடினேன் | வேப்பமரம் | தேன்சிட்டு | கருமேகக்கூட்டம் |
| பேருந்து | கண்டேன் | வேர்ப்பலா | பருவத்தேர்வு | தென்றல்காற்று |
| வென்றது | தென்மேற்கு | அமர்ந்தேன் | சாப்பிட்டேன் | ஆழிப்பெருங்கடல் |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 21 7/11/2025 4:54:37 PM

www.kanimaths.com

## சொற்பட்டியல் 5

| | | | | |
|---|---|---|---|---|
| மைனா | திண்ணை | கெண்டைமீன் | காந்த அலை | மட்டைப்பந்து |
| பறவை | நீர்யானை | வேர்க்கடலை | சுரைக்காய் | மாதுளைச்செடி |
| நத்தை | வகுப்பறை | பச்சைப்பயறு | ஆகையால் | காய்கறிச்சந்தை |
| குப்பை | எலுமிச்சை | பச்சைக்கிளி | விளையாட்டு | முருங்கைக்கீரை |
| திண்ணைப்பேச்சு | | எலுமிச்சைப்பழச்சாறு | | |

## சொற்பட்டியல் 6

| | | | | |
|---|---|---|---|---|
| தொப்பி | பொம்மை | காணொலி | பெயர்ச்சொல் | பொன்வண்டு |
| கோலம் | கோதுமை | எதிரொலி | தொலைபேசி | கோடைக்காலம் |
| சொட்டு | கொய்யா | வான்கோழி | தமிழ்மொழி | விருந்தோம்பல் |
| மொட்டு | மொச்சை | நொடிமுள் | பூங்கொத்து | மாடித்தோட்டம் |
| நொச்சி | மோதிரம் | பச்சோந்தி | அலையோசை | கௌதாரிப்பறவை |
| சோளம் | தோரணம் | கடலோரம் | சாலையோரம் | உண்ணாநோன்பு |
| போட்டி | பொங்கல் | மகிழ்வோம் | தொலைநோக்கி | மரப்பாச்சிப்பொம்மை |
| தோழன் | கோட்டை | சுவரொட்டி | பாட்டொன்று | தொடர்வண்டிநிலையம் |

## தொடர்ப்பட்டியல் 1

விண்மீன் மின்னியது.

ஆற்றில் நீச்சல் அடித்தனர்.

பன்னீர் மலர் மலர்ந்தது.

அழகிய வானவில் பார்த்தாள்.

தாத்தா உண்டியல் தந்தார்.

பூங்காவில் கூட்டம் கூடினர்.

புள்ளிவண்டு பூவில் அமர்ந்தது.

சிங்கப்பூரில் வானூர்தி ஏறலாம்.

தள்ளுவண்டியில் நுங்கு உள்ளது.

பட்டம் செய்ய நூல்கண்டு வாங்கு.

காகமும் கழுகும் வானில் பறந்தன.

மூங்கில் காட்டில் குருவிக்கூடு இருந்தது.

## தொடர்ப்பட்டியல் 2

தெருவில் தேங்காய் விற்றார்.

மழை பெய்து குளம் நிரம்பியது.

மெதுவாக மேகங்கள் நகர்ந்தன.

செங்கல் அருகில் சேவல் நின்றது.

பெட்டியுடன் பேருந்தில் சென்றேன்.

நெல்லிக்காய் நேற்று வாங்கினேன்.

வெட்டுக்கிளி வேலியின்மேல் உள்ளது.

வெயிலுக்கு வேப்பமர நிழலில் அமர்ந்தேன்.

மாலை நேரத்தில் மரத்தில் நாரை இருந்தது.

கூடையில் உள்ள கீரையைக் குதிரை தின்றது.

## தொடர்ப்பட்டியல் 3

கொய்யா வாங்கலாம்.

பாட்டொலி கேட்கலாம்.

கோலப்போட்டி நடந்தது.

பொம்மலாட்டம் பார்க்கலாம்.

மரத்தில் வௌவால் தொங்கியது.

தோட்டத்தில் கோழி சோளம் தின்றது.

கடலோரம் அலையோசை கேட்போம்.

வானொலியில் பாட்டொன்று கேட்டேன்.

முல்லைக்கொடியில் நிறைய மொட்டுகள் உள்ளன.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_15_Days -June24.indd 22 7/11/2025 4:54:37 PM

www.kanimaths.com

# வகுப்புநிலைத் திறன்கள்

| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | அகரவரிசை | 25 |
| 2 | திணை, பால், எண், இடம், காலம் | 26 |
| 3 | சுட்டு, வினா | 28 |
| 4 | மயங்கொலிகள் | 31 |
| 5 | தொடரமைப்பு | 33 |
| 6 | இணைப்புச்சொல் | 34 |
| 7 | நிறுத்தக்குறிகள் | 36 |
| 8 | கடிதம் | 38 |
| 9 | கட்டுரை | 42 |
| 10 | படித்துப் பொருளுணர்தல் | 46 |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 23 7/11/2025 4:38:11 PM

www.kanimaths.com

## வகுப்புநிலைத் திறன்கள்

| வ. எண் | தலைப்பு | நாள் | பாடப்பொருள் | கற்றல் விளைவு |
|---|---|---|---|---|
| 1 | அகர வரிசை | 1, 2 | அகராதியில் பொருளறிதல் | 505. சொற்களின் பொருளை அகராதிகளில் கண்டறிதல். |
| 2 | திணை, பால், எண், இடம், காலம் | 3, 4 | திணை, பால், எண், இடம், காலம் | 506. மொழியின் இலக்கணக் கூறுகளைப் (திணை, பால், எண், இடம், காலம்,சுட்டு) புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் பயன்படுத்துதல். |
| 3 | சுட்டு, வினா | 5, 6 | சுட்டு, வினா எழுத்துகள் | 504. படித்த, கேட்ட கருத்துகள் குறித்து வினாக்கள் எழுப்புதல். |
| 4 | மயங்கொலிகள் | 7, 8 | மயங்கொலிகள் (எழுத்துகள், சொற்கள், தொடர்கள்) | 506. மொழியின் இலக்கணக் கூறுகளைப் (மயங்கொலி)புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் பயன்படுத்துதல். |
| 5 | தொடரமைப்பு | 9, 10 | தொடரமைப்பு அறிதல் | 506. மொழியின் இலக்கணக் கூறுகளைப் (தொடரமைப்பு) புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் பயன்படுத்துதல். |
| 6 | இணைப்புச் சொல் | 11, 12 | இணைப்புச் சொற்கள் | 506. மொழியின் இலக்கணக் கூறுகளைப் (இணைப்புச்சொல்) புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் பயன்படுத்துதல். |
| 7 | நிறுத்தக்குறிகள் | 13, 14 | நிறுத்தக்குறிகள் | 618. நிறுத்தக்குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி எழுதுதல். |
| 8 | கடிதம் | 15, 16 | உறவுமுறைக் கடிதம், அலுவலகக் கடிதம் | 512. தேவை, கற்பனையின் அடிப்படையில் கடிதங்கள் எழுதுதல். |
| 9 | கட்டுரை | 17,18 | கட்டுரை எழுதுதல் | 818. தமது சொந்த அனுபவங்களைத் தமக்கே உரிய மொழிநடையைப் பயன்படுத்திக் கட்டுரை வடிவில் எழுதுதல். |
| 10 | படித்துப் பொருளறிதல் | 19, 20 | உரைப்பத்தி, அறிவிப்பு, நிகழ்வு, செய்தியைப் படித்து விடையளித்தல் | 709. ஒன்றைப் படித்து முழுமையான பொருளை உணர்ந்து சார்ந்த வினாக்களுக்கு விடையளித்தல்.<br>807. கதை, நிகழ்வு, செய்தி, அறிவிப்பு போன்றவற்றைப் படித்துக் கருத்துகளைக் கண்டறிதலும் ஊகித்தறிதலும். |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 24 7/11/2025 4:38:11 PM

# 1 அகரவரிசை

நாள்:1,2

## கற்றல் விளைவுகள்

- சொற்களை அகரவரிசைப்படுத்துவர்.
- அகராதியின் வாயிலாகச் சொற்பொருள் அறியும் திறன் பெறுவர்.

## 1 வரிசை அறிதல்

மாணவர்களை மூன்று குழுவாகப் பிரித்துக் கடற்கரை, பூங்கா, பேருந்து நிலையம் என்ற மூன்று தலைப்பைக் கொடுங்கள். குழுவினர் ஒவ்வொருவரையும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு தொடர்பான சொற்களைக் குறிப்பேட்டில் எழுதச்செய்யுங்கள்.

(எ.கா.)

| கடற்கரை | பூங்கா | பேருந்து நிலையம் |
|---|---|---|
| சங்கு, கடல்நண்டு, சிப்பி, முத்து, கட்டுமரம், காற்று, மணல்வீடு | குழந்தைகள், சறுக்குப்பலகை, குளம், ஊஞ்சல், மலர்கள் | மக்கள், பயணம், பேருந்து, சாளரம், வரிசை, சந்தை, பயணச்சீட்டு |

மாணவர்கள் குறிப்பேட்டில் எழுதிய சொற்களைக் கூறச்செய்து, கரும்பலகையில் எழுதி அகரவரிசையை அறிமுகம்செய்யுங்கள்.

கட்டுமரம், கடல்நண்டு, குழந்தைகள், குளம் ...

சங்கு, சந்தை, சறுக்குப்பலகை...

வகுப்பறையில் உள்ள மாணவர்களின் பெயர்கள் / தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பேட்டில் எழுதி, அகரவரிசைப்படுத்தச் செய்யலாம்.

## 2 சொற்பொருள் கண்டறிதல்

மாணவர்களின் குறிப்பேட்டில் உறவுப்பெயர்களை எழுதச்செய்து அவற்றிற்கான பொருளை அகராதியில் கண்டறிந்து எழுதச்செய்யுங்கள்.

தமிழில் ஒரு சொல், பல பொருளைத் தரும். எனவே, ஒரு சொல்லுக்கான பொருளை அறியும்போது அந்த இடத்தில் அச்சொல் என்ன பொருள் தருகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு சொற்பொருள் அறிதல் வேண்டும் என்பதை விளக்குங்கள்.

செயல்பாட்டின்போது வரிசை அறிதலில் இடர்ப்படும் மாணவர்களுக்கு ஒரே வரிசை எழுத்துகளைக் கலந்து எழுதி, அவற்றின் வரிசை முறையை அறியச்செய்யுங்கள்.

(எ.கா.) கு, கீ, கூ, கெ, கி, கே, கௌ, கை, கொ, க, கோ, கா



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 25 7/11/2025 4:38:12 PM

# 2 திணை, பால், எண், இடம், காலம்

நாள்: 3,4

## கற்றல் விளைவு

◈ மொழியின் இலக்கணக் கூறுகளைப் (திணை, பால், எண், இடம், காலம்) புரிந்துகொண்டு அவற்றைத் தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

கற்பித்தல் செயல்பாடுகளின்போது ஒவ்வொரு அலகின் இறுதியில் உள்ள கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க... பகுதியில் உள்ள விளக்கத்தை தேவைப்படும் இடங்களில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

### 1 திணையைக் கண்டறிதல்

- மாணவர்களை இரு குழுவாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.
- முதல் குழுவினர் வகுப்பில் உள்ள ஒருவர் பெயரை / ஒரு பொருளின் பெயரைக் கூறிப் பெயர் இது, திணை/ பால்/ஒருமை/பன்மை எது? எனக் கேட்கவேண்டும். இரண்டாம் குழுவினர் திணை அது... பால் அது... என விடை கூறவேண்டும். அதற்கேற்ப வழிகாட்டுங்கள்

(எ.கா.) ✦ குழு 1– பெயர் இது... நாற்காலி... திணை எது? திணை எது?
✦ குழு 2– திணை அது, திணை அது... நாற்காலி அஃறிணை.

### 2 காலத்தைக் கண்டறிதல்

- கீழ்க்காணும் தொடர்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- ஒவ்வொரு தொடராகப் படித்து, விடுபட்ட சொல்லைக் கண்டறியச்செய்யுங்கள்.
- கண்டறிந்த சொற்களின் காலத்தை விளக்கிக்கூறுங்கள்.

**தொடர்கள்**

✦ யாழ்நிலா நேற்று ஓவியம் ____________ (வரை).
✦ அந்தோணி அடுத்த வாரம் கடற்கரைக்குச் ____________ (செல்).
✦ அகிலன் இப்பொழுது ____________ (விளையாடு).

### கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

**திணை**

- உயர்திணை – மனிதர்களைக் குறிப்பது.
- அஃறிணை – மனிதர் அல்லாதவற்றைக் குறிப்பது.

**பால்**

திணையின் உட்பிரிவே பால் ஆகும். பால் என்ற சொல்லிற்குப் பகுப்பு என்பது பொருள்.

**உயர்திணை**

✦ ஓர் ஆணை மட்டும் குறிப்பது ஆண்பால் எனப்படும்.
(எ.கா.) மதன், முகிலன், சிறுவன்
✦ ஒரு பெண்ணை மட்டும் குறிப்பது பெண்பால் எனப்படும்.
(எ.கா.) மதி, கவிதா, தோழி
✦ ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.
(எ.கா.) சிறுவர்கள், மக்கள், அவர்கள்



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 26 7/11/2025 4:38:12 PM

www.kanimaths.com

### அஃறிணை

- அஃறிணையில் ஏதேனும் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்;
  (எ.கா.) பறவை, குருவி, பந்து, காகம்
- அஃறிணையில் ஒன்றுக்கும் மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும்;
  (எ.கா.) பறவைகள், விலங்குகள், நாற்காலிகள்

### எண்

ஒருமை – ஒன்றைக் குறிப்பது.
பன்மை – ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது.

### இடம்

இடம் மூன்று வகைப்படும்.

- தன்மை – தன்னைக் குறிப்பது.
- முன்னிலை – முன்னால் இருப்பவரைக் குறிப்பது.
- படர்க்கை – தன்னையும் குறிக்காமல் முன்னால் இருப்பவரையும் குறிக்காமல் மூன்றாவதாக உள்ள பிறரைக் குறிப்பது.

### காலம்

காலம் மூன்று வகைப்படும்.

- இறந்தகாலம் – நடந்து முடிந்த செயலைக் குறிப்பது.
- நிகழ்காலம் – நடந்து கொண்டிருக்கும் செயலைக் குறிப்பது.
- எதிர்காலம் – நடக்கப்போகும் செயலைக் குறிப்பது.

(எ. கா.) கண்ணன் வந்தான்– கண்ணன் வருகிறான்– கண்ணன் வருவான்.

| மூவிடப்பெயர்கள் – ஒருமையும் பன்மையும் | | | | | |
|---|---|---|---|---|---|
| தன்மை | | முன்னிலை | | படர்க்கை | |
| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
| நான், யான், என் | நாம், யாம், நாங்கள், எங்கள் | நீ உன் | நீர், நீங்கள், நீவிர், நீயிர், உங்கள் | அவர் அவன், அவள், அது | அவர்கள், அவை |

### மூவிடப்பெயர்களில் ஒருமை, பன்மை

1. தன்மை ஒருமை – நான் பேசினேன்.
2. தன்மைப் பன்மை – நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்.
3. முன்னிலை ஒருமை – நீ என்ன செய்தாய்?
4. முன்னிலைப் பன்மை – நீங்கள் பார்த்தீர்களா?
5. படர்க்கை ஒருமை – அவள் நடனம் ஆடினாள்.
   அது பறந்தது.
6. படர்க்கைப் பன்மை – அவர்கள் பேசினர்.
   அவை நீந்தின.



Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 27 7/11/2025 4:38:12 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

# 3 சுட்டு, வினா

நாள்: 5,6

கற்றல் விளைவு

◈ படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து வினாக்கள் எழுப்புவர்; விடையளிப்பர்.

## 1 தொடரைப் படித்து வினாக்கள் எழுப்புதல்

பின்வரும் தொடரைக் கரும்பலகையில் எழுதுங்கள். மாணவர்கள் அத்தொடரைப் படித்துப் பல்வேறு வினாக்கள் எழுப்பச்செய்யுங்கள்.

**ஓவியா பள்ளிக்கு வரும்வழியில் வண்ணத்துப்பூச்சியைப் பார்த்தாள்.**

(எ.கா.)
- ஓவியா பள்ளிக்கு வரும் வழியில் என்ன பார்த்தாள்?
- ஓவியா வண்ணத்துப்பூச்சியை எங்கே பார்த்தாள்?
- வண்ணத்துப்பூச்சியைப் பார்த்தது யார்?
- ஓவியா வண்ணத்துப்பூச்சியைப் பார்த்தாளா?
- ஓவியா பார்த்தது வண்ணத்துப்பூச்சியா?
- ஓவியா வண்ணத்துப்பூச்சியைப் பார்த்தாளோ?
- வண்ணத்துப்பூச்சியைப் பார்த்தது ஓவியாவோ?
- பள்ளிக்குச் சென்றது ஓவியாதானே?
- ஓவியா பார்த்தது வண்ணத்துப்பூச்சியைத்தானே?

இதேபோன்று பல்வேறு தொடர்களை எழுதி அத்தொடர்களுக்குப் பொருத்தமான வினாக்களை உருவாக்கச்செய்யுங்கள்.

இச்செயல்பாடு ஒரு தொடரில் பல்வேறு வினாக்களை உருவாக்கும் திறனைப் பெறச்செய்கிறது.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 28 7/11/2025 4:38:12 PM

## 2 கதையைக் கேட்டு வினாக்கள் உருவாக்குதல்

பின்வரும் கதையை மாணவர்களுக்குப் படித்துக்காண்பித்து அதிலிருந்து வினாக்களை உருவாக்கிக் கூறச்செய்யுங்கள்.

அழகான ஒரு மான்கன்று, தன் தாய்க்குப் பரிசளிக்க நினைத்தது. அதற்காக மலையின் உச்சியில் உள்ள சுவைமிகுந்த இலைகளைப் பறித்துத்தர எண்ணியது. மலையின் உச்சிக்குச்சென்றது. கூடையில் நிறைய இலைகளைப் பறித்துக்கொண்டது. பிறகு மலையைவிட்டு இறங்கியது.

அதை ஒரு சிங்கம் கவனித்தது. "அழகான மான்கன்று. இதைத் தின்றால் சுவையாக இருக்கும்!" என மனத்துக்குள் நினைத்துக்கொண்டது. வேகமாக இறங்கியதில் மானுக்கு மூச்சுவாங்கியது. சிங்கம், உடனே மானிடம் சென்று, "ஏன் உனக்கு இப்படி மூச்சு வாங்குகிறது? கூடையைத் தூக்க முடியவில்லையா, வா! என் வீட்டில் சற்று ஓய்வெடுக்கலாம்" என்று கூறியது. சிங்கத்தின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட மான்கன்று, "இல்லை இல்லை நான் இலைகளைப் பறிக்கும்போது சில நச்சு இலைகளைத் தின்றுவிட்டேன். அதனால்தான் வயிற்றுவலி ஏற்பட்டு இப்படி நடக்கமுடியாமல் மூச்சு வாங்குகிறது" என்றது.

"ஓ அப்படியா! அப்படியானால் உன் உடல் முழுவதும் நஞ்சு பரவி இருக்கும் அல்லவா?" எனக் கேட்டது சிங்கம். "ஆமாம்" என்று சோகமாகத் தலையை ஆட்டியது மான். சிங்கம், மானைச் சிறிதுநேரம் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டது. மான்கன்றும் வீட்டுக்குச்சென்றது. அம்மாவிடம் பரிசினைக் கொடுத்துவிட்டு நடந்ததைக் கூறியது. அம்மா, மான்கன்றைப் பாராட்டியது.

என்ன? – யார்? – எதற்கு? – எப்படி? – எங்கே? – எத்தனை? – ஏன்? போன்ற வினாச் சொற்கள் அமையுமாறு வினாக்கள் உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

## கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

### சுட்டு

ஒன்றைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர். அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். 'உ' என்னும் எழுத்தைத் தற்போது சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

(எ.கா.) அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த

(சுட்டுப் பகுதி சார்ந்து வகுப்பு 7, 8 மாணவர்களுக்கு மட்டும் பயிற்சிநூலில் பயிற்சிகள் உள்ளன.)



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 29 7/11/2025 4:38:12 PM

## வினா

வினா என்றால் வினவுதல், கேட்டல் எனப் பொருள்படும். வினாப் பொருளைத் தரும் எழுத்துகள் வினா எழுத்துகளாகும். அவை எ, யா, ஆ, ஓ, ஏ என்பனவாகும்.

(எ.கா.) எவர்?, யார்?, அவனா?, அவளோ?, யானே?

- 'எ', 'யா' ஆகிய இரண்டு எழுத்தும் சொல்லின் முதலில் வந்து வினாப்பொருள் தரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **எவன்?** | – | **யாவன்?** | **எவள்?** | – | **யாவள்?** |
| **எவர்?** | – | **யாவர்?** | **எவை?** | – | **யாவை?** |

- 'ஆ', 'ஓ' ஆகிய இரண்டு எழுத்தும் சொல்லின் இறுதியில் வந்து வினாப்பொருளைத் தரும்.

| ஆ | | ஓ | |
|---|---|---|---|
| அவனா? | வரைந்தானா? | அவனோ? | பெற்றானோ? |
| அவளா? | பாடினாளா? | அவளோ? | எழுதினாளோ? |
| அவரா? | செய்தாரா? | அவரோ? | கேட்டாரோ? |
| அவர்களா? | பேசினார்களா? | அவர்களோ? | நின்றார்களோ? |

- 'ஏ' என்னும் எழுத்து, சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளைத் தரும்.

| | | |
|---|---|---|
| **ஏன்?** | – | **யானே**? (ஏ) |
| **ஏது?** | – | **அவனே**? (ஏ) |

- யார்? – மனிதரைக் குறித்து வினா எழுப்ப உதவும் சொல்.
- எது? – பறவை, விலங்கு, பொருள்கள் போன்றவற்றைக் குறித்து வினா எழுப்ப உதவும் சொல்.
- எத்தனை? – எண்ணிக்கையை அறிந்துகொள்வதற்கு வினா எழுப்ப உதவும் சொல்.
- என்ன? – பொருள்/விளக்கம் அறிந்துகொள்வதற்கு வினா எழுப்ப உதவும் சொல்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 30 7/11/2025 4:38:12 PM

# 4 மயங்கொலிகள்

நாள்: 7,8

## கற்றல் விளைவு

◈ பொருள் வேறுபாடு அறிந்து சொற்களைப் பயன்படுத்துவர்.

## 1 நாநெகிழ் / நாபிறழ் பயிற்சி அளித்தல்

கீழ்க்காணும் தொடர்களை மீண்டும் மீண்டும் கூறச்செய்து பயிற்சி அளியுங்கள்.

- குலை குலையாய் வாழைப்பழம் மழையில் அழுகிக் கீழே விழுந்தது.
- பலாப்பழம் பழுத்துப் பள்ளத்தில் விழுந்தது.
- ஆடுற கிளையில ஒரு கிளை தனிக்கிளை;

  தனிக்கிளை தனில் வந்த கனிகளும் இனிக்கல.
- ஓடுற நரியில ஒரு நரி கிழநரி; கிழநரி முதுகுல ஒருபிடி நரைமுடி.

## 2 தொடரை நிரப்புதல்

பின்வரும் தொடர்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். விடுபட்ட சொற்களை நிரப்பச்செய்யுங்கள். (பின்வரும் அட்டவணை இச்செயல்பாட்டிற்கு உதவியாக அமையும்)

**தொடர்கள்**

**குறள், குரல், மறம், மரம், பரவை, பறவை, ஒலி, ஒளி**

- உன் ______________ கேட்க இனிமையாக இருக்கிறது.
- வழிபாட்டுக் கூட்டத்தில் நான் கூறிய ______________ இதுதான்.
- என் செல்ல விலங்கின் ______________ கேட்டு ஓடிவந்தேன்.
- ஓவியம் வரைவதற்குப் போதுமான______________ இல்லை.
- 'கடல்' என்பதன் மற்றொரு பெயர் ______________
- பறந்து செல்வதால் இதற்குப் பெயர் ______________
- நம் பள்ளித் தோட்டத்தில் ______________ உள்ளது.
- வீரர்களுக்கு இருப்பது______________

பின்வரும் சொற்பொருள் தொகுப்பை விளக்கத்தாளில் எழுதிக் காட்சிப்படுத்தலாம்.



Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 31 7/11/2025 4:38:12 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

| சொல் | பொருள் | சொல் | பொருள் |
|---|---|---|---|
| ஒலி | சத்தம் | கலை | ஓவியம், இசை முதலியன |
| ஒளி | வெளிச்சம் | களை | தேவையற்ற தாவரம் |
| ஒழி | அழித்தல் | கழை | கரும்பு, மூங்கில் |
| கரை | ஆற்றின் ஓரம் | பரவை | கடல் |
| கறை | அழுக்கு | பறவை | பறக்கும் உயிரினம் |
| குரல் | வாயால் எழுப்பப்படும் ஒலி | மரம் | தாவரம் |
| குறள் | குறுகிய செய்யுள் | மறம் | வீரம் |
| அணல் | கழுத்து | பலம் | உறுதி |
| அனல் | நெருப்பு | பழம் | கனி |
| பள்ளி | கல்வி பயிலும் இடம் | தலை | உடல் உறுப்பு |
| பல்லி | சிறு உயிரினம் | தளை | கட்டுதல் |


**கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...**

மயங்கொலிகள் என்பவை உச்சரிப்பில் சிறுவேறுபாடுகளைக் கொண்டவை. கேட்பதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றக் கூடியவை. ஆனால், சொல்லில் இடம்பெறும்போது பொருள் மாறுபடும். இவற்றைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் பொருள் குழப்பம் ஏற்படும்.

மயங்கொலி எழுத்துகள் எட்டு உள்ளன. அவை

**ண, ந, ன, ல, ள, ழ, ர, ற**

| | | |
|---|---|---|
| ண – 'டண்ணகரம்'<br>ந – 'தந்நகரம்'<br>ன – 'றன்னகரம்' | ர – இடையின 'ரகரம்'<br>ற – வல்லின 'றகரம்' | ல – மேல்நோக்கு 'லகரம்' (தொடு லகரம்)<br>ள – பொது 'ளகரம்' (வருடு ளகரம்)<br>ழ – சிறப்பு 'ழகரம்' |




மயங்கொலி எழுத்துகளை முறையாக ஒலிக்க, கொடுக்கப்பட்ட படத்தின் உதவியோடு ஒலிப்புப்பயிற்சி அளிக்கலாம். எழுத்துகள் மாறும்போது பொருள்வேறுபடும் என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டைக்கொண்டு விளக்கலாம்.

(எ.கா.) மணம் – பூக்கள் மணம் வீசும்.
மனம் – மனிதருக்கு நல்ல மனம் வேண்டும்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 32 7/11/2025 4:38:12 PM

# 5 தொடரமைப்பு

நாள்: 9,10

## கற்றல் விளைவு

◈ மொழியின் இலக்கணக் கூறுகளைப் ( தொடரமைப்பு) புரிந்துகொண்டு அவற்றைத் தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## தொடர் உருவாக்குதல்

மாணவர்களைச் சில தொடர்கள் கூறச்செய்து கரும்பலகையில் எழுதுங்கள்.

(எ.கா.)
- நிலவன் தண்ணீர் குடித்தான்.
- தோட்டத்தில் வண்ணத்துப்பூச்சி பறந்தது.
- மாணவர்கள் மிதிவண்டி ஓட்டினர்.

தொடர்களில் உள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றுக்கான விளக்கமளித்து மாணவர்களைக் கண்டறியச் செய்யுங்கள்.

## கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருள் தரும் முறையில் தொடர்வது தொடர் ஆகும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து தொடர் அமையும்.

(எ.கா.) தென்றல் ஓவியம் வரைந்தாள்.

- **தென்றல்** என்பது எழுவாய். ஒரு தொடரில் யார்?, எது?, எவை?, யாவர்? ஆகிய வினாக்களுக்கு விடையாக வருவது எழுவாயாகும். எழுவாய் என்பது பெயர்ச்சொல்.
- **ஓவியம்** என்பது செயப்படுபொருள். ஒரு தொடரில், யாரை? எதை? எவற்றை ஆகிய வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருளாகும்.
- **வரைந்தாள்** என்பது பயனிலை. ஒரு தொடரில் வரும் வினைச்சொல்லே பயனிலை.
- ஒரு தொடரில் எழுவாயும் செயப்படுபொருளும் பெயர்ச்சொல்லாக இருக்கும். பயனிலை, அந்தத் தொடரின் பயன் நிலைத்து இருக்கும் இடமாகும். ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. செயப்படுபொருள் தோன்றும் தொடர், விளக்கமாக இருக்கும்.
- சில இடங்கள் தவிர, ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்ற எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

நானே செய்வேன் – மதிப்பீட்டுப் பகுதியைச் செய்ய வழிகாட்டுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 33 7/11/2025 4:38:12 PM

www.kanimaths.com

# 6 இணைப்புச்சொல்

நாள்: 11,12

## கற்றல் விளைவு

- மொழியின் இலக்கணக் கூறுகளைப் (இணைப்புச் சொல்) புரிந்துகொண்டு அவற்றைத் தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 தொடரை இணைத்தல்

- அதனால், ஏனெனில், மட்டும், அல்லது ஆகிய சொற்களைக் கரும்பலகையில் எழுதவும்.
- பின்வரும் தொடர்களைத் துண்டுத்தாளில் எழுதிச் சுருட்டி மேசையின்மீது வைக்க வேண்டும்.
- மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுவாகப் பிரித்தல் வேண்டும். மேசையின் மீதுள்ள துண்டுத்தாளினை எடுத்துப்படித்து, பொருத்தமான இணைப்புச்சொல்லைக் கண்டறிந்து நிரப்புதல் வேண்டும்.

**தொடர்கள்**

1) தாத்தாவிற்குக் கால்வலி. ______________________, அவர் ஊருக்கு வரவில்லை.
2) கருமேகங்கள் வானில் திரண்டன. ______________________, மழை பெய்தது.
3) செடி வாடி விட்டது. ______________________, தண்ணீர் ஊற்றினேன்.
4) அக்காவிற்குக் காய்ச்சல். நான் ______________________ பள்ளிக்குச் செல்கிறேன்.
5) முஸ்தபாவிற்கு, செல்லப் பிராணிகளில் பூனைகளை ______________ மிகவும் பிடிக்கும்.
6) தொலைக்காட்சியில், என் அம்மா எப்பொழுதும் செய்திகளை ____________ பார்ப்பார்.
7) காலையில் ______________________ மாலையில் நடைப்பயிற்சிக்குச் செல்லலாம்.
8) இரவு உணவிற்கு இட்டலி ______________________ தோசை செய்யலாம்.
9) சுற்றுலாவிற்குப் பேருந்தில் ______________________ தொடர்வண்டியில் செல்லலாம்.
10) சிறுவர்கள் யாருமே விளையாடவில்லை. _________, மழைபெய்து கொண்டிருந்தது.
11) முகிலன் மருந்து சாப்பிட்டான். ______________________, அவனுக்குக் காய்ச்சல்.
12) முத்துவும் கலாவும் வேகமாக வீட்டிற்கு வந்தனர். ______________________, பாட்டி ஊரிலிருந்து வந்திருந்தார்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 34 7/11/2025 4:38:13 PM

## 2 தொடர்கள் உருவாக்குதல்

**அதனால், ஏனெனில், ஆனால், அப்படியானால், மட்டும், அல்லது** ஆகிய சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

இணைப்புச்சொற்களைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையில் தொடர்களைக் குறிப்பேட்டில் எழுதச் செய்யலாம்.

(எ.கா.) நீங்கள் சொன்ன கதை எனக்குப் புரிந்தது. **அதனால்** சிரித்தேன்.

### கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

இணைப்புச்சொல் என்றால் இரண்டு சொல்/தொடரை இணைக்கப் பயன்படுத்தப்படும் சொல் என்று பொருள். இவை தொடர்களில் கருத்தை மேலும் தெளிவுபடுத்தவும் தொடர்பை ஏற்படுத்தவும் உதவுகின்றன.

இணைப்புச்சொற்களைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

**காலம் காட்டும் இணைப்புச்சொற்கள்:** அப்பொழுது, இப்பொழுது, முன்பு, பின்பு, பின்னர், உடனே, அதேசமயம், இவ்வாறு.

(எ.கா.) மழை பெய்து கொண்டிருக்கிறது. இப்பொழுது, வெளியே போக வேண்டாம்.

**காரணம் காட்டும் இணைப்புச்சொற்கள்:** ஏனெனில், ஆகையால், ஆதலால், அதனால், ஆகவே, ஏனென்றால்.

(எ.கா.) மழை பெய்தது. அதனால், பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

**எதிர்ச்சொல் இணைப்புச்சொற்கள்:** ஆனால், ஆயினும், இருப்பினும், எனினும், இருந்தபோதிலும், மாறாக.

(எ.கா.) வளவன் வேகமாக ஓடினான். ஆனால், பேருந்தைத் தவறவிட்டான்.

**ஒற்றுமை காட்டும் இணைப்புச்சொற்கள்:** மேலும், அதுபோல, அதுமட்டுமல்லாமல், இதோடு, அத்துடன்.

(எ.கா.) மதன் நன்றாகப் பாடுவான். மேலும், நடனமும் ஆடுவான்.

**விருப்பம் அல்லது தெரிவு காட்டும் இணைப்புச்சொற்கள்:** அல்லது, இல்லையென்றால், அல்லது என்றால்.

(எ.கா.) நீ தேநீர் அருந்துகிறாயா அல்லது காபி வேண்டுமா?

**விளைவு காட்டும் இணைப்புச்சொற்கள்:** ஆக, ஆகவே, ஆதலால், அதனால், எனவே.

(எ.கா.) மதி நன்றாகப் படித்தாள். ஆகவே, நல்ல மதிப்பெண்கள் பெற்றாள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 35 7/11/2025 4:38:13 PM

www.kanimaths.com

# 7 நிறுத்தக்குறிகள்

நாள்:13,14

கற்றல் விளைவு

- நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப குரல் ஏற்ற இறக்கத்துடன் படிப்பர்; நிறுத்தக்குறிகளை முறையாகப் பயன்படுத்துவர்.

## 1 சிறுகதையைப் படித்தல்

- சிறுகதையை நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தாமல் படித்துக்காட்டுங்கள் பின்னர், நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்திப் படித்துக்காட்டுங்கள் இரண்டிற்குமான வேறுபாடுகளை மாணவர்களுடன் உரையாடி நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துவதன் இன்றியமையாமையை உணரச் செய்யுங்கள்.

### மலையும் எதிரொலியும்

வினோத் அவன் தந்தையுடன் மலைப்பகுதியில் நடந்துசென்றான். அப்பொழுது, திடீரென்று கல் தடுக்கி கீழே விழுந்தான். அடிபட்டதால், "ஆஆஆ!!!" என்று கத்தினான். என்ன ஆச்சரியம்! அவனுடைய சத்தம் அவனுக்கே திருப்பிக்கேட்டது, வினோத் ஆவலுடன் "யார் நீ?" என்று கேட்டான். திரும்ப அவனுக்கு "யார் நீ?" என்ற சத்தம் கேட்டது. "உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று மலையைப் பார்த்து அவன் கத்தினான். உடனே "உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று கேட்டது. இதைக் கேட்டதும் அவனுக்குக் மிகுந்த ஆர்வம் வந்தது. "உன்னால் நேரில் வர முடியாதா" என்று கேட்டான். அவனுக்கு மறுபடியும் அதே பதிலே வந்தது. அவன் தன்னுடைய தந்தையைப் பார்த்து "அப்பா! இங்கு என்ன நடக்கிறது?" என்று கேட்டான். அவனுடைய அப்பா சிரித்துக்கொண்டே, "வினோத்! கவனமாகக் கேள்!" என்றார். மலையைப் பார்த்து "நீ ஒரு வெற்றி வீரன்" என்று கத்தினார். "நீ ஒரு வெற்றி வீரன்" என்று கேட்டது. "இதுதான் எதிரொலி" என்றார் அப்பா.

## 2 நிறுத்தக்குறியிடுதல்

- பின்வரும் எடுத்துக்காட்டில் உள்ளவைபோல நிறுத்தக்குறிகளைக் குறிப்பிடாமல் தொடர்களை விளக்கத்தாளில் இரண்டு தொகுப்பு எழுதிக்கொள்ளுங்கள்.
- முற்றுப்புள்ளி, உணர்ச்சிக்குறி, காற்புள்ளி, வினாக்குறி ஆகியவற்றையும் தொடர்களில் பொருத்தும் அளவில் சிறு துண்டுத்தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.
- மாணவர்களை இரண்டு குழுவாகப் பிரித்து, தொடர்கள் எழுதப்பட்ட விளக்கத்தாள்களையும் நிறுத்தக்குறி எழுதப்பட்ட துண்டுத்தாள்களையும் கொடுத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு குழுவினரும் தொடர்களில் நிறுத்தக்குறிகளைப் பொருத்திக் காட்டவேண்டும்.
- முதலில் பொருத்தும் குழுவினரைப் பாராட்டுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 36 7/11/2025 4:38:13 PM

(எ.கா.)

1. ஆகா தொட்டவுடனே எல்லா இலைகளும் சுருங்கிவிட்டதே
2. ஒட்டகச்சிவிங்கியால் ஒலி எழுப்ப இயலாது
3. நீங்கள் என்னென்ன ஓவியங்களை வரைந்தீர்கள்
4. கடற்கரைத்தோட்டம் விளையாட்டுத் திடல் ஆகிய இடங்கள் மிகவும் பிடித்தவை

## கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

பேசும்போது சில சொற்களுக்குப்பின் சிறு காலஇடைவெளி விடுகிறோம்; வேறு சில இடங்களில் சற்றே அதிகக் காலஇடைவெளி தருகிறோம். மேலும், சொற்களையும் தொடர்களையும் தேவையான இடங்களில் ஏற்றஇறக்கத்தோடு ஒலிக்கிறோம். கால இடைவெளி தருதல், நிறுத்துதல், ஏற்றஇறக்கம் தருதல் போன்ற முறைகளால் செய்திப் பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கிறோம். எழுதும்போது பேச்சில் பயன்படுத்தும் மேற்கூறிய முறைகளுக்கு ஈடாகச் சிறு காலஇடைவெளிக்குக் காற்புள்ளி [,], சற்று அதிகக் காலஇடைவெளிக்கு முற்றுப்புள்ளி [.], ஏற்றஇறக்கங்களுக்கு உணர்ச்சிக்குறி [!], கேள்விக்குறி [?] போன்ற குறிகளைப் பயன்படுத்துகிறோம்.

**நிறுத்தக்குறிகள்**

| | | |
|---|---|---|
| காற்புள்ளி | , | ஒரு தொடரில் பல பொருள்கள் அடுக்கி வரும்போது குறிக்கப் படுவது. (எ.கா.) மா, பலா, வாழை ஆகியவற்றை முக்கனி என்பர். |
| அரைப்புள்ளி | ; | ஓர் எழுவாய், பல பயனிலைகளைப் பெற்று வரும்போது ஒவ்வொரு பயனிலையின் இறுதியிலும் குறிக்கப்படுவது. (எ.கா.) காளையின் கொம்பைப் பிடித்தல் வீரம்; வாலைப் பிடித்தல் வீரமின்மை. |
| முக்காற்புள்ளி | : | ஒரு தொடரின் தொடர்பை உணர்த்தக் குறிக்கப்படுவது. (எ.கா.) முக்கனி : மா, பலா, வாழை |
| முற்றுப்புள்ளி | . | ஒரு தொடர் முடிவு பெற்றதனை உணர்த்துவதற்காகக் குறிக்கப்படுவது. (எ.கா.) எனக்குச் சடுகுடு விளையாடப் பிடிக்கும். |
| வினாக்குறி | ? | ஒரு தொடர் வினாப்பொருளைத் தரும்போது குறிக்கப்படுவது. (எ.கா.) அப்பா என்னால் பறக்க முடியாதா? |
| உணர்ச்சிக் குறி | ! | ஒரு தொடர் உணர்ச்சியை வெளிப்படுத்தும்போது குறிக்கப்படுவது. (எ.கா.) என்னே! கங்கை கொண்ட சோழபுரக் கோவிலின் அழகு! |
| ஒற்றை மேற்கோள் குறி | ‘ ’ | ஒரு தொடரில் நூல் பெயர், கட்டுரை பெயர், பழமொழி முதலியன வந்தால் குறிக்கப்படுவது. (எ.கா.) பிரபஞ்சனின் படைப்புகளுள் 'வானம் வசப்படும்' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. |
| இரட்டை மேற்கோள் குறி | “ ” | ஒரு தொடரில் ஒருவர் கூறியதை நேர்க்கூற்றாகக் கூறும்போதும் ஒரு தொடரை மேற்கோளாகப் பயன்படுத்தும் போதும் குறிக்கப்படுவது. (எ.கா.) "கண்வனப்பு கண்ணோட்டம்" என்று சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது. |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 37 7/11/2025 4:38:13 PM

# 8 கடிதம்

நாள்:15,16

## கற்றல் விளைவு

◈ தேவையின் அடிப்படையிலும் தலைப்பின் அடிப்படையிலும் கடிதம், கட்டுரைகளை எழுதுவர்.

## கடிதங்களைப் படித்தல்

பின்வரும் கடிதங்களைப் படித்துக் காண்பித்து எவ்வகையில் கடிதம் எழுதலாம் என விளக்கம் அளியுங்கள்.

### உறவுமுறைக் கடிதம்

75, அண்ணா நகர்,
அரியலூர் – 621 704.
06.07.2025

அன்புள்ள தமிழ்மணிக்கு,

நான் நலம். உன் நலம் அறிய ஆவல். உன் வீட்டில் அனைவரும் நலமா? வரும் புதன்கிழமை (14.07.2025) அன்று எங்கள் ஊரில் தேர்த்திருவிழா நடைபெற உள்ளது. இத்திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. எனவே, நீ உன் குடும்பத்துடன் திருவிழாவைக் காணவருதல் வேண்டும். உன்வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.

அன்புடன்,
இனியன்.ஆ

உறைமேல் முகவரி
அ. தமிழ்மணி,
த/பெ. அறிவழகன்,
7, வடக்கு வீதி,
பெரம்பலூர் – 621 212.

### பாராட்டுக் கடிதம்

விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உன் நண்பனைப் பாராட்டும் கடிதம்

25, சிவன் கோவில் தெரு,
கீழப்புலியூர்,
பெரம்பலூர் – 621 212.
05.07.2025

அன்புள்ள செல்வனுக்கு,

நலம். நலமறிய ஆவல். நேற்று, அரியலூரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஓட்டப்போட்டியில் முதலாவதாக வந்து வெற்றி பெற்றாய் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். உனக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 38 7/11/2025 4:38:13 PM

www.kanimaths.com

'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கேற்ப இனிவரும் போட்டிகளிலும் நீ மாநில அளவிலும், தேசிய அளவிலும் வெற்றி பெற உள்ளன்போடு வாழ்த்துகிறேன்.

நட்புடன்,
கா. காவியா

உறைமேல் முகவரி
க. செல்வன்,
த/பெ. த. கண்ணன்,
76, சமத்துவபுரம்,
அரியலூர் – 621 704.

**கற்பனைக் கடிதம்**

- மாணவர்கள் யாருக்கு / எதற்கு வேண்டுமானாலும் தான்கூற நினைப்பதைக் கடிதமாக எழுதலாம்.
- மாணவர்கள் சொந்தநடையில் எழுதும்போது சில பிழைகள் ஏற்படும். நாளடைவில் அவர்கள் சரியான மொழிநடையை அறிந்துகொள்வர்.
- மாணவர்கள் கற்பனையாக எழுதும் கடிதங்களை வகுப்பறையில் படித்துக்காட்ட நேரம் வழங்கி, அவர்களின் கடிதம் எழுதும் ஆர்வத்தைத் தூண்டலாம்.

48, மல்லிகை நகர்,
பழத்தோட்டம்,
திருநெல்வேலி.

அன்பிற்குரிய பட்டாம்பூச்சிக்கு,

நான் இங்கு நலம். நீ நலமாக இருக்கிறாயா? நீ நாள்தோறும் வரும் தோட்டத்திற்கு இரண்டு நாளாக ஏன் வரவில்லை? நீ தேன் குடிப்பதற்காக நான் புதிய பூச்செடிகளை நட்டு வைத்துள்ளேன். நீ வரும்போது எனக்காக வானவில்லின் வண்ணங்களை வாங்கி வருவாயா? நீ இன்று மாலை, தோட்டத்திற்கு வருவாய் என உனக்காகவே காத்திருப்பேன். நீ வந்து விடுவாய்தானே?

ஆர்வத்துடன் காத்திருக்கும்,
பூவிழி.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 39 7/11/2025 4:38:13 PM

**புத்தகங்கள் வேண்டி பதிப்பகத்தாருக்கு விண்ணப்பம்**

அனுப்புநர்

ப. தேன்மொழி,
ஏழாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
டி.ஆர். பஜார், உதகமண்டலம்,
நீலகிரி மாவட்டம் – 643 001.

பெறுநர்

மேலாளர்,
பாரதி பதிப்பகம்,
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை – 600 017.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : புத்தகங்கள் வேண்டி விண்ணப்பித்தல் – சார்பு

கோடைக்கால விடுமுறையில் என்னுடைய நேரத்தைப் பயன் உள்ளதாக மாற்றவும் பொதுஅறிவினை வளர்க்கவும் ஆவலாக உள்ளேன். எனவே, கீழ்க்காணும் நூல்களை அஞ்சல்வழியில் அனுப்பி வைக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். புத்தகங்களுக்கான விலையினை வங்கி வரைவோலையாக (ரூபாய் ஆயிரம்) இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தெனாலி இராமன் கதைகள் 1 பிரதி (ரூ. 250)
2. அறிவியல் அறிஞர் வாழ்க்கை வரலாறு 1 பிரதி (ரூ. 500)
3. மூலிகை ஆய்வுக் கட்டுரைகள் 1 பிரதி (ரூ. 250)

நன்றி!

நாள் : 02.05.2025 தங்கள் உண்மையுள்ள,

இடம் : உதகமண்டலம் ப. தேன்மொழி

**உறைமேல் முகவரி**

பெறுநர்

மேலாளர்,
பாரதி பதிப்பகம்,
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை – 600 017.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 40 7/11/2025 4:38:13 PM

## கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

கடிதம் எழுதுதல் ஒரு சிறந்த கலை. கடிதம் அல்லது மடல் எனப்படுவது இருவருக்கிடையே இடம்பெறும் தகவல் பரிமாற்றத்தைக் குறிக்கிறது.

**கடித வகைகள்**

கடிதங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

**1. உறவுமுறைக் கடிதம்**

உறவினர்கள், நண்பர்களுக்கு எழுதுவது.

**2. அலுவலகக் கடிதம்**

பல்வேறு அலுவல் சார்ந்து தனிநபர் (அ) ஒரு குழு, உரிய அலுவலர்களுக்கு விண்ணப்பித்தல்.

### உறவுமுறைக் கடித அமைப்பு

| | | |
|---|---|---|
| 1. | முகவரி | கடிதம் எழுதுபவர் முகவரி |
| 2. | விளித்தல் | அன்புள்ள தோழனுக்கு / அன்புள்ள தோழிக்கு / அன்புள்ள மாமாவிற்கு / அன்புள்ள அத்தைக்கு |
| 3. | கடிதச் செய்தி | கடிதத்தின் மையப் பொருள் |
| 4. | கடித முடிப்பு | கடித முடிப்பு வாழ்த்து, கையொப்பம் |
| 5. | உறைமேல் முகவரி | கடிதம் பெறுபவர் முகவரி |

### அலுவலகக் கடிதம் எழுதும் முறை/அமைப்பு

அலுவலகக் கடிதத்தில் பின்வருவன இடம்பெறுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | அனுப்புநர் முகவரி | கடிதம் எழுதுபவர் முகவரி |
| 2. | பெறுநர் முகவரி | அலுவலக முகவரி |
| 3. | விளித்தல் | மதிப்பிற்குரியீர், ஐயா, அம்மையீர் |
| 4. | பொருள் | கடிதத்தின் மையப் பொருள் |
| 5. | உடற்பகுதி | கடிதத்தின் விளக்கப் பொருள் |
| 6 | கடித முடிப்பு | கடித முடிப்பு, கையொப்பம் |
| 7 | இடம் | கடிதம் எழுதும் இடம் |
| 8 | நாள் | கடிதம் எழுதும் நாள் |
| 9 | உறைமேல் முகவரி | கடிதம் பெறுபவர் முகவரி |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 41 7/11/2025 4:38:13 PM

# 9 கட்டுரை

நாள்:17,18

## கற்றல் விளைவு

◈ தேவையின் அடிப்படையிலும் தலைப்பின் அடிப்படையிலும் கடிதம், கட்டுரைகளை எழுதுவர்.

## 1 கட்டுரை உருவாக்குதல்

மரங்கள் குறித்து மாணவர்களிடம் கேளுங்கள்; மாணவர்கள் கூறும் அனைத்துக் குறிப்புகளையும் கரும்பலகையில் வரிசையாக எழுதுங்கள்.

குறிப்புகளைக் கரும்பலகையில் எழுதிய பிறகு படித்துப் பார்க்கும்படி கூறுங்கள். படித்துப் பார்த்ததும் பின்வரும் தலைப்புகளில் அக்குறிப்புகளைத் தனித்தனியாகப் பிரித்துத் தொகுத்தால் அருமையான கட்டுரை தயாராகிவிடும் என்பதை மாணவர்கள் உணரும்படி செய்யுங்கள்.

- முன்னுரை [இப்பகுதிக்கு ஏற்ற தொடர்களுக்கு ● வைக்கவும்.]
- பொருளுரை [மரங்களின் வகைகள், மரங்களின் பயன்பாடுகளைக் குறிப்பிடும் தொடர்களுக்கு ✓ செய்யவும்.]
- முடிவுரை [இப்பகுதிக்கு ஏற்ற தொடர்களுக்கு ★ இடவும்.]

குறியிட்டவற்றைப் பிரித்து அதற்குரிய தலைப்புகளில் எழுதினால் முழுமையான கட்டுரை கிடைக்கும்.

(எ.கா.)

● மரங்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை.
✓ மரங்கள் நிழல் கொடுக்கும்.
✓ பழங்கள், காய்கள் கொடுக்கும்.
✓ நாம் சுவாசிக்கக் காற்றைக் கொடுக்கும்.
✓ மரத்தில் ஊஞ்சல் ஆடலாம்.
✓ மரங்கள் வீடுகட்ட உதவும்.
✓ மரங்களில் பல வகை உண்டு.
● மரங்கள் பெரியதாகவும் உயரமாகவும் இருக்கும்.
✓ மரம், பறவைகள் கூடு கட்ட இடம் கொடுக்கும்.
✓ விலங்குகள் மரத்தடியில் இளைப்பாறும்.
✓ வேப்பமரம், புளியமரம், கொய்யாமரம், தென்னைமரம், ஆலமரம், பனைமரம் போன்று பலவகை மரங்கள் இருக்கின்றன.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 42 7/11/2025 4:38:13 PM

★ மரங்களைத் தேவையின்றி வெட்டக்கூடாது.
★ மரங்களை நட்டு வளர்க்க வேண்டும்.
★ மரங்கள் மழை தரும்.
★ மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம் !
● மரங்கள் செடிகளைவிடப் பெரிதாக வளரும்.

**மரங்கள்**

**முன்னுரை**

மரங்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை. மரங்கள் பெரியதாகவும் உயரமாகவும் இருக்கும். மரங்கள் செடிகளைவிடப் பெரிதாக வளரும். மரங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருளுரை**

வேப்பமரம், புளியமரம், கொய்யாமரம், தென்னைமரம், ஆலமரம், பனைமரம் போன்று பலவகை மரங்கள் இருக்கின்றன. மரங்கள் நிழல் கொடுக்கும். பழங்கள், காய்கள் கொடுக்கும். நாம் சுவாசிக்கக் காற்றைக் கொடுக்கும். மரத்தில் ஊஞ்சல் ஆடலாம். மரம், பறவைகள் கூடு கட்ட இடம் கொடுக்கும். விலங்குகள் மரத்தடியில் இளைப்பாறும்.

**முடிவுரை**

மரங்களைத் தேவையின்றி வெட்டக்கூடாது. மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். மரங்கள் மழை தரும். எனவே, மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

◉ இதேபோன்று எந்தவொரு தலைப்பு கொடுத்தாலும் முதலில் அத்தலைப்பு தொடர்பான குறிப்புகளை எழுதி, வரிசைப்படுத்தி வகைப்படுத்திவிட்டு அக்குறிப்புகளைத் தனித்தனித் தலைப்புகளாகத் தொகுத்தால், கட்டுரை எளிதாக எழுதிவிட முடியும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துங்கள்.

## 2 முன்னுரை முதல் முடிவுரை வரை!

'பொங்கல் திருநாள்' என்ற தலைப்பில் அமைந்துள்ள கட்டுரை குறித்து விளக்குதல்

**குறிப்புச் சட்டகம்**

◉ முன்னுரை
◉ போகித்திருநாள்
◉ பொங்கல் திருநாள்
◉ மாட்டுப்பொங்கல்
◉ காணும் பொங்கல்
◉ முடிவுரை



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 43 7/11/2025 4:38:13 PM

www.kanimaths.com

**முன்னுரை**

நாம் எண்ணற்ற விழாக்களைக் கொண்டாடுகிறோம். அவற்றில் மிகவும் முக்கியமான விழாவாகக் கொண்டாடப்படுவது 'தமிழர் திருநாள்' என அழைக்கப்படும் பொங்கல் திருநாள் ஆகும். இயற்கை தெய்வமான சூரியனுக்கும் உழவுத்தொழிலுக்குப் பெரிதும் பயன்படும் மாடுகளுக்கும் நன்றி கூறும் வகையில் கொண்டாடப்படும் விழாவாகும்.

**போகித் திருநாள்**

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

என்னும் நன்னூல் தந்த நல்லுரை ஏற்றுப் பழைய பொருள்களில் பயன்படாத பொருள்களை எரிப்பதே போகிப்பண்டிகை. இது மார்கழி மாதத்தின் கடைசி நாளில் கொண்டாடப்படுகிறது.

**பொங்கல் திருநாள்**

தைத்திங்கள் முதல்நாள் பொங்கல்விழா கொண்டாடப்படுகிறது. அதிகாலையில் எழுந்து குளித்து புத்தாடை அணிவர். வாசலில் கோலமிடுவர். கரும்பும், வாழையும் கட்டுவர். விளக்கேற்றுவர். புதுஅடுப்பில் இஞ்சியும் மஞ்சளும் கட்டிய புதுப்பானை வைத்து புத்தரிசி இடுவர். பொங்கல் பொங்கி வரும்போது "பொங்கலோ பொங்கல்" என அனைவரும் கூறி மகிழ்வர். பின்னர், தலைவாழை இலையில் பொங்கலிட்டு சூரியனை வழிபடுவர். அனைவரும் பொங்கல் உண்பர். பிறருக்கும் விருந்தளித்து மகிழ்ந்திடுவர்.

**மாட்டுப்பொங்கல்**

உழவுத்தொழிலுக்கு உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. மாட்டுப்பொங்கல் அன்று மாடுகளைக் குளிப்பாட்டி, மஞ்சளிட்டு, குங்குமமிடுவர். பின்னர், மாடுகளுக்குப் பொங்கலிட்டு மகிழ்வர். அன்றைய நாள் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு நடைபெறும்.

**காணும் பொங்கல்**

'நல்லாரைக் காண்பதும் நன்றே' என்பதற்கேற்ப அனைவரும் சேர்ந்து நல்லாரைக் கண்டு அவர்களை வணங்குவர். பெரியோர்களிடம் சிறார்கள் ஆசி பெறுவர். பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

**முடிவுரை**

நன்றித் திருநாள், இயற்கை வழிபாடு, தமிழர் திருநாள் எனப் போற்றப்படும் பொங்கல்விழா தரணி போற்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 44 7/11/2025 4:38:14 PM

## கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

### 1. கட்டுரை

ஒரு பொருளைப் பற்றி இலக்கண முறையில் கட்டுரைப்பது கட்டுரை. உள்ளத்தில் தோன்றுவதை உரைப்பது கட்டுரை. குறிப்பிட்ட பொருளைப் பற்றி ஒரு கட்டுக்கோப்புடன் யாவரையும் ஈர்க்கும் வகையில் அமைக்கப்படுவதைக் 'கட்டுரை' எனலாம்.

கடல், அலை, வனம், வயல் போன்ற இயற்கைக் காட்சிகளையோ, பறவைகள் விலங்குகளையோ பார்க்கும்போது நம் மனத்தில் கற்பனையாகப் பலவித சொற்றொடர்கள் இயல்பாகத் தோன்றும். அவற்றை எழுத்து வடிவில் எழுதும்போது கோவையாகவும் தெளிவாகவும் எழுதவேண்டும். அதற்குத் துணைநிற்பதே கட்டுரைப் பயிற்சி.

### 2. கட்டுரையின் அமைப்பு

எந்தப் பொருளைப் பற்றிக் கட்டுரை எழுதினாலும் அது முன்னுரை – பொருளுரை – முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும். முன்னுரையும் முடிவுரையும் சிறுசிறு பகுதிகளாக அமைய வேண்டும்.

### முன்னுரை

முன்னுரை என்பது அறிமுக உரை. கட்டுரையில் என்ன எழுதப் போகிறோம் என்பதன் அறிமுகமாக அது அமைய வேண்டும். எழுதப்புகும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். முன்னுரையைப் படித்தாலே கட்டுரையின் சிறப்புத்தன்மை விளங்கும் வகையில் அமைய வேண்டும். மேற்கோள்களை எழுதலாம்.

### பொருளுரை

எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் / தலைப்புகளில் விளக்கிக் கூறும் பகுதியாகும். சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொண்ட தலைப்புகளுக்கேற்ப உள் தலைப்புகள் பலவற்றையும் கொண்டதாகப் பொருளுரை அமைய வேண்டும்.

### முடிவுரை

கட்டுரையில் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். மிகவும் நீளமாக எழுதுதல் கூடாது. சுருக்கமாக எழுத வேண்டும்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 45 7/11/2025 4:38:14 PM

# 10 படித்துப் பொருளுணர்தல்

நாள்:19,20

கற்றல் விளைவு

◈ தாங்களாகவே செய்தித்தாள், அறிவிப்புகள், விளம்பரங்கள், முழக்கத் தொடர்கள், துண்டறிக்கை செய்திகள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்வர்; வினாக்களுக்கு விடையளிப்பர்; புதிதாக உருவாக்குவர்.

## படித்துப் பொருளுணர்தல்

பின்வரும் உரைப்பகுதியைப் படித்துக்காண்பித்து, இதிலிருந்து எவ்வாறு கருத்துகளைத் தெரிந்துகொள்ள வேண்டும், வினாக்களுக்கு எவ்வாறு விடையளிக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக்கூறுங்கள்.

### விளையாட்டு

தமிழர்களின் வீரவிளையாட்டுகளுள் ஒன்று சிலம்பம். சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் என்ற பெயர் தோன்றியது. கம்பு சுழற்றுதல் என்னும் பெயரும் இதற்கு உண்டு. சிலம்பக் கலையில் மான்கொம்பு, பிச்சுவா, கத்தி, சுருள்பட்டா, வளரி போன்ற ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. தற்காப்புக்காகத் தோன்றிய இக்கலை, வீர விளையாட்டாக இன்று அறியப்படுகிறது.

- உரைப்பகுதியில் பேசப்படும் விளையாட்டு – சிலம்பம்
- சிலம்பம் என்பதற்கான பொருள் – ஒலித்தல்
- சிலம்பம் என்னும் பெயர் தோன்றியதன் காரணம் – கம்பு சுற்றும் ஓசை
- சிலம்பத்தில் பயன்படுத்தப்படும் வேறு ஆயுதங்கள் – மான்கொம்பு, பிச்சுவா, கத்தி, சுருள்பட்டா, வளரி
- உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள நிறுத்தக்குறிகள் – காற்புள்ளி, முற்றுப்புள்ளி

**வினாக்கள்**

1. சிலம்பு என்பதன் பொருள் என்ன?
   சிலம்பு என்பதன் பொருள் ஒலித்தல்.
2. சிலம்பம் விளையாட்டு உருவான காரணம் யாது?
   தற்காப்பு காரணமாகவே சிலம்பம் உருவானது.
3. நீங்கள் அறிந்த வீரவிளையாட்டுகள் இரண்டனைக் குறிப்பிடுக.
   ஜல்லிக்கட்டு, வில்வித்தை



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 46 7/11/2025 4:38:14 PM

www.kanimaths.com

4. சிலம்பக்கலையில் மான்கொம்பு பிச்சுவா கத்தி சுருள்பட்டா வளரி போன்ற ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன – பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

   சிலம்பக்கலையில் மான்கொம்பு, பிச்சுவா, கத்தி, சுருள்பட்டா, வளரி போன்ற ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

5. உரைப்பகுதியிலிருந்து இரண்டு வினா உருவாக்குக.
   'கம்பு சுழற்றுதல்' என்று அழைக்கப்படும் கலை எது?
   'தன்னைப் பாதுகாத்தல்' என்ற பொருள்தரும் சொல் எது?

நானே செய்வேன் – மதிப்பீட்டுப் பகுதியைச் செய்ய வழிகாட்டுங்கள்.

## கற்றல் கற்பித்தலில் வளம் சேர்க்க...

### பல்வேறு வகையான படித்தல் பகுதிகள்

- நிகழ்வு
- உரைப்பகுதி
- கதை
- விளம்பரம்
- படம்/வரைபடம்
- அறிவிப்பு
- அட்டவணை
- உரையாடல்
- சொற்றொடர்
- குறிப்புகள்
- கூற்று
- செய்தி

போன்ற பல்வேறு பகுதிகளைப் படித்துக் கருத்துகளை அறிந்துகொள்ளும் வழிமுறைகளையும் வினாக்களுக்கு விடை அளிக்கும் பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்கலாம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



Thiran_6_to_8_THB_2025_20_Days-June24.indd 47
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
7/11/2025 4:38:14 PM

www.kanimaths.com

# THIRAN

## (Targeted Help for Improving Remediation & Academic Nurturing)

3308050080 8
www.kanimaths.com
3308050080 8
3308050080 8
3308050080 8

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான $24 \times 7$ கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

CHILD LINE 1098 NIGHT & DAY

அழையுங்கள் குழந்தை உதவி எண் **1098**
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?

14417 கல்வித் தகவல் மையம்

அழையுங்கள் **14417**
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education